# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report 2012

## වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය
## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## Ministry of Plantation Industries

55/75, වොක්ෂෝල් පටුමග, කොළඹ 02.
இலக்கம் 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02.
**No. 55/75, Vauxhall Lane, Colombo 02.**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2012

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

இலக்கம் 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02.

# உள்ளடக்கம்


பக்கம்

1. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

1.1 அறிமுகம் 1

1.2 நோக்கக்கூற்று 1

1.3 பணிக்கூற்று 1

1.4 அமைச்சின் கொள்கை 2

1.5 அமைச்சின் உபாயமுறை அபிவிருத்தி நோக்கம் 2

1.6 அமைச்சின் செயலாற்றுகை பார்வை 2

1.7 2012 ஆண்டில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி விடயங்ககள் 3

2. நிதியியல் முன்னேற்ற மீளாய்வு 5

3. துறைசார் மீளாய்வு

3.1 தேயிலை துறை 6

3.2 இறப்பர் துறை 14

3.3 கட்டுபொல் (பாம் எண்ணெய்) மரசெய்கைத்துறை 20

3.4 வெளிநாட்டு கடன்மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்கள்

3.4.1 சிறு பெருந்தோட்ட முயற்சியாளர்களின் அபிவிருத்தி நிகழச்சித்திட்டம் 21

4. பிரிவுசார் செயலாற்றுகை

4.1 நிர்வாகப் பிரிவு 26

4.2 கணக்கியல் பரிவு 28

4.3 உள்ளக கணக்காய்வுப் பிரிவு 29

4.4 அபிவிருத்திப் பிரிவு 31

4.5 திட்டமிடல் பிரிவு 34

4.6 பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவு 35

4.7 தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டம் (துண்டாடல் கட்டுப்பாட்டுச்) சபை 39

இணைப்பு I 2012 ஆண்டு நிதி முன்னேற்றம் 42

# 01. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## 1.1 அறிமுகம்

தேயிலை, இறப்பர், தெங்கு, பனை, கரும்பு, மல்பேரி மற்றும் மரமுந்திரிகை முதலான பயிர்கள் உள்ளடங்கிய பெருந்தோட்டப்பயிர்களை அபிவிருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டே 1971 ஆம் ஆண்டில் இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு நிறுவப்பட்டது. 22 ஆம் திகதி நவம்பர் மாதம் 2010 ஆம் ஆண்டு 1681/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் படி பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்கு தற்போது பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளாவன, மஹிந்த சிந்தனையின் தொலைநோக்கு அல்லது அரசினால் செயற்படுத்த எதிர்பார்க்கும் தேசிய கொள்கைகளின் ஊடாக கொள்கைகளை அமைத்து அமைச்சிற்கும் மற்றும் அதற்கு உரித்தான நிறுவனங்களில் தேயிலை, இறப்பர் ஆகியன தொடர்பான விடயங்களுக்கு உரிய கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழச்சித்திட்ட வழங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் தொழிற்பாடு தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிகளுக்கான நடவடிக்கைகள், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு காணி துண்டாடுதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் அது தொடர்பான அனுமதி பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்தல் போன்றனவாகும். பிரிதொரு அமைச்சின் கீழ் நிரந்தரமாக பொறுப்பளிக்கப்படாத பெருந்தோட்டப் பயிர்களை விருத்தி செய்தல், மற்றும் ஆய்வு செய்தல் என்பனவுடன் கட்டுப்பொல் பயிர்ச்செய்கை தொடர்பான செயற்பாடுகளும் இவ் அமைச்சிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலங்கைத் தேயிலைச்சபை, தேயிலை ஆராய்ச்சி நிலையம், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தேயிலைச் சக்தி நிதியம், வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலை கைத்தொழிற்சாலை கம்பனி, இறப்பர் அபிவிருத்தி திணைக்களம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம், துருசவிய நிதியம், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம், தேய-லை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட ( காணி துண்டாடலை கட்டுப்படுத்தல்) சபை ஆகிய நிறுவனங்கள் இவ்வமைச்சின் கீழ் செயற்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) ஊடாக இலங்கை அரசின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்படுகின்ற “சிறு அளவிலான பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும்” பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.2. நோக்கக்கூற்று

“பெருந்தோட்டக் கைத்தொழில் அபிவிருத்தியினூடாக தேசிய சௌபாக்கியத்தை தோற்றுவித்தல்”

## 1.3. பணிக்கூற்று

பொருளாதார சமூக மற்றும் சூழல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட பிரிவொன்றின் ஊடாக பெருந்தோட்டக் கைத்தொழிலின் உற்பத்தித்திறன், இலாபம் மற்றும் நிலைபேற்றுத் தன்மையை மேம்படுத்துதல்.

## 1.4 அமைச்சின் கொள்கை.

" மஹிந்த சிந்தனை தொலைநோக்கு" ஊடாக 2010 ஆம் ஆண்டில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் உருவாக்கப்பட்ட இலங்கை அரசின் கொள்கைக் கட்டமைப்பிற்கு ஏற்ப அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் பின்வருமாறு:-

I. பயிர்ச்செய்கை நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

II. தேயிலை மற்றும் இறப்பர் மீள் நடுகையின் வருடாந்த வீதத்தை அதிகரித்தல்.

III. பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்கு பயிர்ச்செய்கையை விரிவாக்கல்.

IV. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

V. பெறுமதியைச் சேர்த்தலும் வியாபாரப் பெயரை மேம்படுத்துதலும்.

VI. ஊடு பயிர்ச் செய்கையை விரிவாக்கல்.

## 1.5. உபாய வழிமுறை அபிவிருத்தி நோக்கங்கள்.

I. அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரித்தல்.

II. உற்பத்திச் செலவை குறைந்த மட்டத்தில் பேணுதல்.

III. சிறு தோட்ட காணி உரிமையாளர்கள் மற்றும் பெருந்தோட்ட கம்பனிகளின் இலாபத்தினை அதிகரித்தல்.

IV. பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.

V. உள்நாட்டு நுகர்வோருக்கு தரத்தில் உயர்ந்த சிறந்த உற்பத்தியைப் பெற்றுக்கொடுத்தல்.

VI. சூழல் பாதுகாப்பின் ஊடான நிரந்தர அபிவிருத்தி.

VII. தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திக்கான சர்வதேச விற்பனைச் சந்தை பிரசாரம் செய்தல்.

## 1.6 அமைச்சின் செயலாற்றுகை அட்டவணை

அமைச்சின் இடைக்கால அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளல் நோக்கில் 6 செயலாற்றுகை அட்டவணைகள் இனங்காணப்பட்டுள்ளன.

I. தேயிலை மற்றும் இறப்பரில் பெறப்படும் அந்நியச்செலாவணியின் அளவு.

II. உற்பத்தித்திறன் (காணிப்பிரிவில் கிடைக்கின்ற விளைச்சலை அதிகரித்தல்.)

III. தேயிலை மற்றும் இறப்பர் மீள் நடுகையின் வீதம்,

IV. புதிய பயிர்ச் செய்கை காணிப்பரப்பு.

V. பெறுமதியைச் சேர்த்த உற்பத்தியின் அளவு மற்றும் பெறுமதி

VI. விற்பனை விலைக்கு ஏற்ப குறைந்த உற்பத்திச்செலவு.

## 1.7 2012 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்.

I. தேயிலை மற்றும் இறப்பர் துறையில் பயிர்ச்செய்வோர், உற்பத்தியாளர், ஏற்றுமதியாளர் மற்றும் ஒன்றுகூடல்கள் போன்றவற்றின் பங்களிப்பை மதிப்பிடவும் அவர்களை மேலும் ஊக்குவித்தலுக்குமாக உருவாக்கப்பட்டுள்ள விசேட போட்டி நிகழ்ச்சிகளின் கீழ் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் வரலாற்றில் முதன்முறையாக தேசிய பெருந்தோட்ட விருது வழங்கும் வைபவம் ஒன்றை நடாத்துதல்.

II. சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பிரதேச பெருந்தோட்ட கம்பனி உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களோடு பெருந்தோட்டத் துறையுடன் தொடர்புடையவர்களை அறிவுறுத்துதலை நோக்காகக் கொண்டு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார-சபை, இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் கீழ் பல்வேறு பயிற்சி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.

III. பெருந்தோட்டத்துறை தொடர்பில் உருவாக்கப்பட்ட பயிற்சி பத்திரம், தவணை வெளியீடு மற்றும் ஆராய்ச்சி குறிப்புகள் வெளியீடுகளும் இடம்பெறுகின்றன.

IV. உணவு பானமாக கருதப்படும் தேயிலை உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு தொடர்பில் அங்கத்துவ நாடுகளில் நிலவும் பிரச்சினைகளை ஆலோசித்தல் நோக்கில் கொழும்பில் உணவு மற்றும் விவசாய அமைப்பு / தேயிலைத் தொடர்பான உள்நாட்டு அரசக்குழுக் கூட்டத்தை சிறப்பாக நடாத்துதல். இதற்கு மேலதிகமாக தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகளின் அமைச்சர்களின் மாநாட்டை 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே கொழும்பில் நடாத்த போதிய ஆரம்ப ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

V. தேயிலை மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிலையங்களால் நிகழ்த்தப்படும் தரத்தில் உயர்ந்த விசேட வகை தொடர்பாகவும் மண் மற்றும் பயிர்ச்செய்கைக்கு தொடர்பான ஏனைய ஆய்வுகளையும் தொடர்ச்சியாக நடாத்துதல்.

VI. காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்துடன் இணைந்து உலகலாவிய தொடர்பாடல் சேவையை பயன்படுத்திக் கொண்டு தேயிலை, இறப்பர் மற்றும் கட்டுப்பொல் பயிர்ச்செய்கை நிலம் தொடர்பான வரைபடத்தினை இற்றைப்படுத்தலுக்கான முதற்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

VII. பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகள-ில் கெடஸ்தர அளக்கும் செயற்பாட்டை மீள ஆரம்பித்தலுக்கு அவசியமான முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் அவற்றை ஆரம்பித்தலும்.

VIII. நிதி ஆணையாளர் சபையுடன் தொடர்பாடலை மேற்கொண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட கிராம வீதிகளை புனரமைத்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

IX. அபிவிருத்தி நோக்கிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளலை இலகுபடுத்திக் கொள்வதற்காக அமைச்சின் கீழான நிறுவனங்களுக்கான சட்டங்களை நி-கழ்கால மற்றும் எதிர்கால தேவைக்கு பொருத்தமாக திருத்தம் செய்வதற்கு போதிய நடவடிக்கைகளை எடுத்தல்.

X. பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உரித்தானப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப தொகை மதிப்புக்கு ஏற்ப புதிய பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான இடங்களை அடை-டயாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல். மேற்படி அடையாளங் காணப்பட்ட காணிகளை பங்கீடு செய்வதற்கான ஜனாதிபதிச் செயலாளர் அவர்களின் ஆலே-ாசனைக்கு ஏற்ப, குறித்த அமைச்சுக்களின் செயலாளர்கள், ஒவ்வொரு பயிர்ச்செய்கை மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பொருத்தமான ஏனைய அமைச்சுக்கள் / திணைக்கள அலுவலர்கள் உள்ளடங்கிய குழுக்கள் மூலமாக

காணிகளை பங்கிட்டுக் கொடுப்பதற்குரிய முறைமையொன்றினை தயாரித்தல் மற்றும் அறிக்கையினை ஜனாதிபதிச் செயலாளர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பித்தல்.

XI. பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையினை விரிவுப்படுத்தும் நடவடிக்கையின் கீழ், வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் இறப்பர் பயிர் ச்செய்கையினை விரிவுப்படுத்துவதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல், அதன் கீழ் பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான பிரதேசங்களை அடையாளங் காணுதல். அதற்கிணங்க, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் பயிர்ச்செய்கையினை விரிவுப்படுத்துவதற்கு தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்துதலும்.

XII. 2012ம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட யோசனைகளுக்கு ஏற்ப, அம்பாறை மாவட்டத்தில் 10,000 ஹெக்டயாரில் இறப்பர் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் திட்டத்தினை வெற்றிகரமாக்குவதற்காக பதியத்தலாவை, மஹாஓய, லபுக்கலை மற்றும் உஹன பிரதேசச் செயலாளர்கள், மகாவலி அபிவிருத்தி அதிகாரச் சபை மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்கள காணிப்பராமரிப்பு கொள்கைத் திணைக்களத்தின், வனவிலங்குத் திணைக்களத்தின் அலுவலர்கள், குறித்த கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளடங்களாக ஏனைய குறித் நிறுவனங்களின் அலுவர்களை இணைத்துக் கொண்டு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். அத்துடன் 2012ம் ஆண்டினுள் 500 ஹெக்டெயரில் இறப்பர் பயிர்ச்செய்கையினை அப்பிரதேசச் செயலகப் பிரிவினுள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

XIII. பதியதலாவை பிரதேசத்தில் புதிய இறப்பர்க்கன்று நாற்றுமேடையொன்றினை ஆரம்பிப்பதற்கு தேவையான காணியினை ஒதுக்கிக்கொள்ளுதல் மற்றும் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

XIV. இலங்கை வங்கியுடன் இணைந்து சிறு இறப்பர் தோட்ட உரிமையா-ளர்களுக்கான நிவாரணக் கடன் திட்ட முறைமையினை அறிமுகப்படுத்துதல்.

XV. தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தேயிலைக் கைத்தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்தல்.

- தேயிலை சக்தி நிதியத்தின் கீழ் நட்டமடைந்து தற்காலிகமாக மூடப்பட்டிருந்த ஹினிதும தேயிலைக் கைத்தொழிற்சாலை, களுபோவிட்டியான கைத் தொழிற்சாலை ஆகியவற்றை கம்பனியின் கீழ் உள்வாங்கி இலாபகரமான முறையில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுச் செல்லுதல்.
- நட்டமடைந்து தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கிளிமலை தே சக்தி தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை ஹிதுரங்கலை தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கத்தின் மூலம் மீண்டும் ஆரம்பித்தல்.
- தேயிலை சக்தி நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தெரனியாகலை தேயிலைத் தொழிற்சாலையின் கட்டுமாண நடவடிக்கைகளை முடிவுறுத்தி, தேயிலை உற்பத்தியை ஆரம்பித்தல்.
- தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த யட்டிநுவர புதிய தேயிலை தொழிற்சாலையின் கட்டுமான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்தல்.

# 2. நிதியியல் முன்னேற்ற மீளாய்வு

**மில்லியன் ரூபாய்**

| நிறுவனம் | 2012 ஆண்டுக்கான மீள்திருத்திய மூலதன ஏற்பாடு | 2012 ஆண்டுக்கான மீள்திருத்திய மீண்டெழும் ஏற்பாடு | 2012 ஆண்டு டிசம்பர் 31 வரையான மூலதன செலவு | 2012 ஆண்டு டிசம்பர் 31 வரையான மீண்டெழும் செலவு | மூலதன செலாற்றுகை % | மீண்டெழும் செயலாற்றுகை % |
|---|---|---|---|---|---|---|
| அமைச்சு | 41.952 | 139.080 | 23.989 | 132.675 | 57 | 95 |
| இலங்கை தேயிலை சபை | 63.560 | 117.600 | 21.000 | 117.110 | 33 | 100 |
| தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் | 118.440 | 245.000 | 50.126 | 233.060 | 42 | 95 |
| சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை | 221.373 | 224.178 | 199.000 | 219.832 | 90 | 98 |
| இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 109.473 | 931.530 | 52.085 | 579.915 | 48 | *62 |
| இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் | 54.600 | 196.000 | 46.000 | 185.705 | 84 | 95 |
| துருசவிய நிதியம் | 5.187 | 9.792 | 5.187 | 9.792 | 100 | 100 |
| தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் | 13.650 | 9.800 | 7.000 | 8.480 | 51 | 87 |
| சிறு பெருந்தோட்ட முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 523.000 | - | 371.905 | - | 71 | - |
| **மொத்த கூ.தொகை** | **1151.235** | **1872. 980** | **776.292** | **1486.569** | **67** | **79** |

*இறப்பர் பயிர்செய்கை மானியத்திற்காக செலுத்த வேண்டிய நிதி கிடைக்காமையால் மீண்டெழும் செயலாற்றுகை குறைவதற்கு காரணமாகவுள்ளது.

# 3. துறைசார் மீளாய்வு

## 3.1 தேயிலைத்துறை

1867 ஆம் ஆண்டில் ஜேம்ஸ்டேலர் ( James Taylor ) என்பவரால் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தேயிலைப் பயிர்ச்செய்கை இதுவரையிலும் இலங்கையில் மலைநாடு, அண்சமவெளி மற்றும் தாழ்நாட்டு வலயங்களில் 14 மாவட்டங்களில் 123 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பரவலாக்கப்பட்டுள்ளது. தேயிலைக் கைத்தொழிலுக்கு உரிய தொலைநோக்கானது நிரந்தர அபிவிருத்தி நோக்கில் சிறு தோட்டப்பிரிவு மற்றும் கூட்டுறவு பிரிவை வலுப்படுத்துவதன் மூலம் தேய-யிலைக் கைத்தொழிலின் எதிர்காலத்தை செழிப்படையச்செய்யவும் இலங்கையை சர்வதேச குடிபாண சந்தையின் முன்னோடியாக மாற்றுவதுமாகும். பெருந்தோட்ட அமைச்சின் கீழ் இயங்கும் தேயிலைச் சபை, தேயிலை ஆராய்ச்சி நிலையம், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தேசக்தி நிதியம் மற்றும் வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனி ஆகிய நிறுவனங்கள் தேயிலைத்துறைக்கு உரியதாக செயற்படும் அரச நிறுவனங்களாகும்.

2012 ஆம் ஆண்டில் 203,020 ஹெக்டேயர் நிலப்பரப்பு தேயிலைப் பயிர்ச்செய்கை விஸ்த்தரிக்கப்பட்டுள்ளதுடன், அதில் 120,955 ஹெக்டேயர் (நூற்றுக்கு 59) சிறு தேயிலைத் தோட்டப்பிரிவிற்கு உரியதாகும். மேலும் 72,684 (நூற்றுக்கு 36) பய-யிரிடல் நிலம் பிரதேசப் பெருந்தோட்டத்துக்கு உரியது அத்துடன், 9381 ஹெக்டேயர் (நூற்றுக்கு 5) அசர நிறுவனத்தின் கீழ் இயங்குகின்றது.


மீளாய்வு ஆண்டிற்குள் ஒரு ஹெக்டேயருக்கு சுமாரான தேயிலை விளைச்சலாக 1,688 மில்லியன் கிலோகிராமாகவும் 2011 ஆம் ஆண்டில் இதுவே 1662 மில்லியன் கிலோகிராமும் ஆகும். அதாவது 2011 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் நூற்றுக்கு 1.6 வீத வளர்ச்சியாகும். 2012 ஆம் ஆண்டில் தேய-யிலை உற்பத்தியானது 328.4 மில்லியன் கிலோ கிராமாகவும், 2011 ஆம் ஆண்டில் இது 327.5 மில்லியன் கிலோகிராமுமாகும். அதாவது 2011 ஆம் ஆண்டு தேயிலை உற்பத்தியோடு ஒப்பிடுகையில் நூற்றுக்கு 0.3 வீத சிறு வளர்ச்சி நிகழ்ந்துள்ளது. 2012 ஆம் ஆண்டின் முதற்பாதியில் விசேடமாக மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் நிகழ்ந்த சீரற்றத் தன்மைகள் மற்றும் வருட நடுப்பாதியில் ஏற்பட்ட குளிர் காலநிலையால் தேயிலை உற்பத்தியில் இத்தகைய சிறு அளவிலான வளர்ச்சி ஏற்பட காரணமாயிற்று.

மீளாய்வு ஆண்டில் உச்சளவிலான தேயிலை உற்பத்தியைப் பேண, தாழ்நாட்டுத் தேயிலை உற்பத்தி 202.1 மில்லியன் கிலோகிராமாகவும் அது வருடத்தின் முழுத் தேயிலை உற்பத்தியில் நூற்றுக்கு 62 வீதமாகும்.

மலைநாட்டு, அண்சமவெளி தேயிலை உற்பத்தி முறையே 73.7 மில்லியன் கிலோகிராம், 52.6 மில்லியன் கிலோகிராம் என அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அது முழுத் தேயிலை உற்பத்தியில் முறையே நூற்றுக்கு 22 வீதமும், நூற்றுக்கு 16 வீதமுமாகும். 2011 மற்றும் 2012 உச்சளவிற்கு முழுத் தேயிலை உற்பத்தி அட்டவணை 3.1 இல் காட்டப்படுகிறது.0

### 3.1 வரைபு குறிப்பு

**2011 , 2012 வருடங்களின் உச்சளவிலான பிரகாரம் தேயிலை உற்பத்தி**




அதற்கிணங்க 2011 ஆம் ஆண்டிலும் 2012 ஆம் ஆண்டில் ஒப்பீட்டளவில் மலை நாட்டுத் தேயிலை உற்பத்தி 4.5 மில்லியன் கிலோகிராம் குறைந்துள்ள அதேவேளை, அவ்வீழ்ச்சிக்கு காரணமாவது முன்பு குறிப்பிட்ட மலை நாட்டு தேயிலையை உற்பத்தி செய்யும் பிரதேசங்களில் ஏற்பட்ட சீரற்றக் காலநிலையாகும். எனினும் 2011 ஆம் ஆண்டில் 196.7 மில்லியன் கிலோகிராமான தாழ்நாட்டுத் தேயிலை உற்பத்தி 2012 ஆம் ஆண்டில் 202.1 மில்லியன் கிலோகிராம் வரை 5.4 மில்லியன் கிலோகிராம் (நூற்றுக்கு 2.8) ஆல் வளர்ச்சி அடைந்துள்ளது. மேலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முழுத் தேயிலை உற்பத்தி பிரதானத் தேயிலை உற்பத்தி முறைமைகளுக்கு ஏற்ப கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

### 3.1 அட்டவணை

### 2011 , 2012 வருடங்களில் உற்பத்தி முறை பிரகாரம் தேயிலை உற்பத்தி

| வகைப்படுத்தல் | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|
| | கி.கிராம் | மொத்த உற்பத்தியில் % | கி.கிராம் | மொத்த உற்பத்தியில் % |
| பாரம்பரிய கறுப்புத் தேயிலை | 302.0 | 92 | 302.1 | 92 |
| சீ.டீ.சீ தேயிலை | 22.5 | 7 | 23.3 | 7 |
| பச்சைத் தேயிலை | 3.0 | 1 | 3.0 | 1 |
| **மொத்தக் கூட்டுத்தொகை** | **327.5** | **100** | **328.4** | **100** |

2011 ஆம் ஆண்டிலும் 2012 ஆம் ஆண்டில் ஒப்பீட்டளவில் சீ.டீ.சீ தேயிலை உற்பத்தி 0.7 மில்லியன் கிலோகிராம் அதாவது நூற்றுக்கு 3 வளர்ச்சி அடைந்துள்ளது. எனினும் 2011 ஆம் ஆண்டில் ஒப்பீட்டளவில் 2012 ஆம் ஆண்டின் முழு தேயிலை உற்பத்திக்காக ஒவ்வொரு வகையினதும் பங்களிப்பில் வெளிப்படையான மாற்றம் ஏற்படவில்லை.

2011 ஆம் ஆண்டில் சிறு தேயிலை தோட்டப்பிரிவில் மீள் பயிரிட்ட காணி 772 ஹெக்டேயர் ஆகவும் 2012 ஆம் ஆண்டில் அது 937 ஹெக்டேயர் வரை விருத்தி அடைந்துள்ளது. இதில் 889 ஹெக்டேயர் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் கீழும் 48 ஹெக்டேயர் சிறு பெருந்தோட்ட நியதிச்சட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழும் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், மீளாய்வு ஆண்டில் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக சிறு தேயிலைத் தோட்டப்பிரிவில் 239 ஹெக்டேயரில் புதிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் 229 மில்லியன் கிலோகிராமும், முழுத் தேயிலை உற்பத்தியில் நூற்றுக்கு 70 வீதமான சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பு மீளாய்வு ஆண்டில் 234.2 மில்லியன் கிலோகிராம் அதாவது, நூற்றுக்கு 71 வீதம் வரையான வளர்ச்சியாகும். 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் தேயிலை உற்பத்தி பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகிறது.

## 3.2 அட்டவணை

## 2011 , 2012 வருடங்களில் துறைரீதியான தேயிலை உற்பத்தி

**கி.கி மில்லியன்**

| பிரிவு | 2011 | 2012 |
|---|---|---|
| கூட்டத்தாபனத்துறை | **98.5** | **94. 2** |
| - பிராந்திய பெ.கம்பனிகள் | 94.2 | 90. 2 |
| - ஜனவசம, அ.பெ.கூ, மற்றும் எல்கடுவ மற்றும் ஏனையவை | 4.3 | 4. 0 |
| சிறு தேயிலை தோட்ட பிரிவு | 229.0 | 234 .2 |
| **மொத்தம்** | **327.5** | **328.4** |

2011 ஆம் ஆண்டில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களால் எற்பத்தி செய்யப்பட்ட முழுத் தேயிலை அளவு 229 மில்லியன் கிலோகிராமாகவும், 2012 ஆம் ஆண்டில் அது 234.2 மில்லியன் கிலோகிராம் வரை அதாவது 5.2 மில்லியன் கிலோகிராம் (நூற்றுக்கு 2.27) ஆல் அதிகரித்துள்ளது. மீளாய்வு ஆண்டிற்குள்ளும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களைக கருத்திற் கொண்டு தொடர்ச்சியாக செயற்படுத்தப்படுகின்ற தேயிலை புதியப் பயிர்ச்செய்கை மற்றும் மீள் பயிரிடல் நிகழ்ச்சித்திட்டங்கள், வெற்றிட நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள், விஸ்த்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவை மற்றும் பயிற்சி வேலைத்திட்டம் காரணமாக சிறு தேயிலைத் தோட்டப் பிரிவில் முழுமையானப் பங்களிப்பானது உயர்ந்துள்ளது. தேசிய உர நிவாரண நிமழ்ச்சித்திட்டத்தின் கீழானத் தேய-ிலைப் பயிர்ச்செய்கையைக் கருத்திற் கொண்டு தொடர்ச்சியாக் பெற்றுக் கொடுக்கப்பட்ட உர நிவாரணமும் சிறு தேயிலைத் தோட்டப் பிரிவின் முழுமையான தேயிலை உற்பத்தி பங்களிப்பு உயர வழி செய்ததுடன், 2012 ஆம் ஆண்டில் தேயிலையை மீள் பயிரிடல் மற்றும் புதிய பயிர்ச்செய்கைக்காக முறையே ஹெக்டெயர் ஒன்றிற்கு 300,000 மற்றும் 150,000 ரூபாய்கள் என அரசினால் தேயிலை நிவாரணக் கொடுப்பனவு அதிகரித்தமையும் தேயிலைப் பயிர்ச்செய்கை அபிவிருத்திக்கு பிரதான காரணமாகின்றது.

மீளாய்வு ஆண்டில் கொழும்பு தேயிலை ஏலத்தில் ஒரு கிலோ தேயிலையின் சாதாரண விற்பனை விலை 391.64 ரூபாய் என அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2011 ஆம் ஆண்டில் ஒரு கிலோகிராமிற்கு 359.89 ரூபாய் என இருந்தது ஒப்பீட்டளவில் நூற்றிற்கு 8.8 வீத வளர்ச்சியாகும். மேலும், 2011 ஆம் கப்பற்போக்குவரத்து செய்தல் வரையிலும் செலவிற்காக (FOB) செலவிற்கான விலை ஒரு கிலோ கிராமிற்கு 563.94 ரூபாய் வரை நூற்றிற்கு 10.3 ஆல் வளர்ச்சி அடைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டின் மீள் ஏற்றுமதியும் உள்ளிட்ட ஏற்றுமதி செய்த அளவு 319.9 மில்லியன் கிலோகிராம். அத்துடன், அதன் மூலம் கிடைத்த வருமதி 180,430 மில்லியன் ரூபாயாகும். 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் தேயிலை ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி கீழ்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

### 3.3 அட்டவணை

### 2011 , 2012 வருடங்களில் தேயிலை ஏற்றுமதி மற்றும் மீள்ஏற்றுமதி தரவுகள்

| ஆண்டு | ஏற்றுமதி | | | மீள்ஏற்றுமதி | | | மொத்த ஏற்றுமதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அளவு கி.கி.மி | FOB விலை (ரூ/ கி.கி) | வருமானம் மி.ரூ | அளவு கி.கி.மி | FOB விலை (ரூ/ கி.கி) | வருமா னம் மி.ரூ | அளவு கி.கி.மி | FOB விலை (ரூ/ கி.கி) | வருமான ம் மி.ரூ |
| 2011 | 303.2 | 500.64 | 151,777 | 19.4 | 674.18 | 13,077 | 322.6 | 511.08 | 164,854 |
| 2012 | 306.0 | 552.26 | 169,015 | 13.9 | 820.84 | 11,415 | 319.9 | 563.94 | 180,430 |

மேற்கண்ட அட்டவணைப்படி, 2011 ஆம் ஆண்டில் அறிக்கையில் குறித்த 322.6 கிலோ மில்லியன் தேயிலை ஏற்றுமதிக்கு 164,854 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டமையை 2012 ஆம் ஆண்டின் ஏற்றுமதி வருமானமானது 15,576 மில்லியன் ரூபாயால் அதிகரித்துள்ளதுடன், 2011 ஆம் ஆண்டிற்கு இணையாக 2012 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதி அளவு 2.7 மில்லியன் கிலோகிராம் (நூற்றுக்கு 0.8 ) ஆல் வீழ்ச்சி அடைந்துள்ளது. இலங்கைத் தேயிலை ஏற்றுமதியின் இரண்டாவது பிரதான கொள்வனவாளரான ஈரானுக்கு எதிராக அமேரிக்காவின் தலையீடும், மூன்றாவது பிரதான கொள்வனவாளரான சிரியாவ-ில் ஏற்பட்டுள்ள சிவில் யுத்த நிலையும் இது தொடர்பிலான பிரதானக் காரணிகளாகும்.

2012 ஆம் ஆண்டின் பிரதான 10 கொள்வனவாளர்களால் கொள்வனவு செய்யப்பட்டத் தேயிலை 214.16 மில்லியன் கிலோகிராமாக உள்ள அதேவேளை அது முழுத் தேயிலை ஏற்றுமதியில் நூற்றுக்கு 67 வீதமாகும். 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் பிரதான கொள்வனவாளர்களிடம் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை மற்றும் அதன் பெறுமதி கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

## 3.4 அட்டவணை

### 2011 , 2012 வருடங்களில் பிரதான கொள்வனவாளர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு மற்றும் அதன் பெறுமதி

| நாடு | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|
| | ஏற்றுமதி அளவு (கி.கி.மி) | பெறுமதி (ரூ.மி) | ஏற்றுமதி அளவு (கி.கி.மி) | பெறுமதி (ரூ.மி) |
| ரஷ்யா | 49.13 | 24,709 | 47.25 | 26,862 |
| ஈரான் | 30.94 | 17,074 | 38.13 | 22,360 |
| சிரியா | 22.62 | 9,041 | 23.48 | 10,636 |
| ஈராக | 19.17 | 8,493 | 23.13 | 11,459 |
| துருக்கி | 28.76 | 613,747 | 24.72 | 13,239 |
| லிபியா | 11.65 | ,280 | 9.55 | 6,058 |
| ஐக்கியஅராபிய எமிரேட | 7.41 | 2,574 | 16.33 | 6,452 |
| அசர்பைஜான் | 11.97 | 5,800 | 10.59 | 5,700 |
| யப்பான் | 7.29 | 3,471 | 9.40 | 4,504 |
| குவைட் | 21.76 | 10,776 | 11.58 | 6,201 |
| ***மொத்தம்*** | **210.70** | **101,965** | **214.16** | **113,471** |

2011 ,2012 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தேயிலை ஏற்றுமதி பிரதான பங்குதாரதாக ரஸ்யாவே இருந்தது. மீளாய்வு ஆண்டில் முழுத் தேயிலை ஏற்றுமதியில் 47.25 மில்லியன் கிலோகிராமே ரஸ்யாவால் கொள்வனவு செய்யப்பட்டது. இது முழுத் தேயிலை ஏற்றுமதியில் நூற்றுக்கு 14.8 வீதமாகும். மேலும் மீளாய்வு ஆண்டில் இலங்கையின் இரண்டாம் பிரதானத் தேயிலை கொள்வனவாளரான ஈரான் 38.13 மில்லியன் கிலோகிராமை கொள்வனவு செய்துள்ளது.மேலும் 2011 ஆம் ஆண்டில் ஈட்டிய செஸ் வரி வருமானம் 2057 மில்லியன் ரூபாய், அத்துடன் 2012 ஆம் ஆண்டில் அது 2,051.4 மில்லியன் ரூபாய் வரை நூற்றுக்கு 0.3 ஆல் வீழ்ந்துள்ளது.

அகிலத் தேயிலை கைத்தொழில் அபிவிருத்தி நோக்கில் மீளாய்வு ஆண்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய செயற்பாடுகள் வருமாறு:-

**I.** ஏற்றுமதி செய்யப்பட்ட ஒவ்வொருத் தேயிலை கிலோவிற்கும் ரூபாய் 3.50 படியான வரியை ஏற்றுமதியாளர்களிடம் அறவிட்டு வருடாந்தம் ஒரு மில்லியன் ரூபாய் என 5 வருட காலத்திற்காக 5 பில்லியன் ரூபாய் நித-யத்தை பெற ஏற்பாடு செய்தல். இவதன் கீழ் வெகுவான வெளிநாட்டு

மற்றம் உள்நாட்டு சந்தையை பெருக்கும் வேலைத்திட்டத்தை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**II.** தேயிலைத்துறையின் செயற்பாடுகளுக்காக தேவையான புதிய வினைத்திறன்மிக்க வழிகாட்டல ஆலோசனைகளை உருவாக்கலும் நடை-முறைப்படுத்தலும்.

**III.** தேயிலைத்துறையின் பங்குதாரர்களுடனான தொடர்பாடலை தொடர்ச்சியாகப் பேணுதல்.

**IV.** தேயிலைத்துறையில் கிருமி நாசிணி மற்றும் உர கலவை தொடர்பில் விசேட சங்கத்தை உருவாக்கி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்.

**V.** தேயிலை மீளப் பயிரிடலுக்காக வழங்கப்படும் நிவாரணத்தை அதிகரிப்பதற்கான சட்டத்திட்டங்களை அமுல் படுத்த நடவடிக்கை எடுத்தல்.

**VI.** தரைத்தோற்ற அம்சங்கள் 7 ற்கு இயைய அதாவது நுவரெலியா, உடபுசல்லாவ, திம்புல்லை, ஊவா, கண்டி, உறுகுணை மற்றும் சம்ரகமுவை ஆகியவற்றுக்கு இலங்கைத்தேயிலை மற்றும் சிங்க இலச்சினையை (Lion Logo) உள்நாட்டு வெயிநாடுகளில் பதிவு செய்தல்.

**VII.** மத்திய கிழக்கு நாடுகளை கவரும் அதிசயமாக தேயிலை ஏற்றுமதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியமற்ற நிலைமைகளைக் குறைக்கப்பதற்கு ராஜதந்திர ரீதியில் தலையிடுதல்.

**VIII.** மாறுபடுகின்ற காலநிலைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடியதும் உயர் உற்பத்தித்திறனுடன் கூடிய 5000 பிரிவிற்குரிய புதிய தேயிலையை துறைக்கு அறிமுகப்படுத்த போதிய ஆய்வுகளை மேலும் மேற்கொள்ளல்.

**IX.** தரத்தில் உயர்ந்த தேயிலைக்கன்றுகளை அவ்வவ் மாவட்ட மட்டத்திலே பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

**X.** விரிவாக்கல் நடவடிக்கையில் புதிய தேயிலைப் பயிர்ச்செய்கை மற்றும் வெற்றிட நடுகைக்காக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களை ஈடுபடுத்தல்.

**XI.** மண் பரிசோதனைக்கு உட்படுத்திய மண்ணின் வளத்தை மேம்படுத்த ஆலோசனைகளை முன்வைத்தல்.

**XII.** சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கருத்திற் கொண்டு நாட்டின் 26 இடங்களில் இடம்பெறும் ஆராய்ச்சிகளில் பெறப்பட்டபெறுபேறுகளின் மூலம் உற்பத்தித்திறனை அதிகரித்துக் கொள்ள புதிய உரப்பாவனைக்கான ஆலோசனையை பெற்றுக்கொடுக்க போதிய ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**XIII.** கௌரவ அமைச்சர் அவர்கள் துறைசார் நிறுவன தலைவர்களுடக் மாவட்ட,வலய மட்டத்தில் தேயிலைக் கைத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் பங்குதாரர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**XIV.** மண்ணின் விளைதகுதன்மை பாதித்தலை தவிர்ப்பதற்காக நிவாரணத்தின் கீழ் கொழுந்தை காக்கும் ப்ளாத்திக்கு உரையைப் பெற்றுக் கொடுத்தல், கொழுந்தை போக்குவரத்து செய்யும் வாகனங்களில் ராக்கைகளைப் பொருத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**XV.** தரமான தேயிலை உற்பத்தியை சந்தைக்கு வழங்குவதற்காக சர்வதேச கேள்விக்கு அமைய தரக்கட்டுப்பாடு மற்றும் தேயிலைத் தெரிற்சாலை நவீன மயப்படுத்தல் வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்.

**XVI.** திவிநெகும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 9.6 மி.ரூ செலவை ஏற்று 453,656 தேய-ிலைக் கன்றுகளும், தேயிலை பயிரிடலில் ஊடு பயிர்ச்செய்கைக்காக 19,418 மிளகுச்செடிகளும், தேயிலை கொழுந்தின் தரம் மற்றும் எற்பத்தித்திறனை அதிகரித்தலுக்காக 2,140 தேயிலைக்கூடைகளை சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களிடையே பகிர்ந்தளிக்கவும் பட்டது.

**XVII.** 2013 ஆம் ஆண்டு பாதீட்டை நோக்காகக் கொண்டு சிறு தேயிலை தோட்டங்களில் கொழுந்தெடுத்தலை திறமாக்கலை கருதி புதிய இயந்திர உபகரணத்தை பெற்றுக் கொடுத்தலுக்கான புதிய வேலத்திட்ட ஆலோசனையை நிதி அமைச்சிடம் முன் வைத்தல்.

## 3.2 இறப்பர் துறை

1876 ஆம் ஆண்டில் சேர் ஹென்றி விக்கம் (Sir Henry Wickham) என்பவரால் இந்நாட்டிற்கு அறிமுகம் செய்யப்பட்ட இறப்பர் பயிர்ச் செய்கையானது, இலங்கையின் மரபு ரீதியான இறப்பர் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களான கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருணாகல், பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. இதற்கு மேலாக மரபு ரீதியற்ற பிரதேசங்களான மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, வட மாகாணத்தில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் இறப்பர் பயிர்ச்செய்கையை விஸ்தரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்புடைய தொலைநோக்காகவிருப்பது தரமிக்க மற்றும் விளைவுப் பெருக்கமுள்ள பயிர்ச்செய்கையொன்றைப் பரப்புவதனூடாக தேசிய உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிப்பதற்கும் இறப்பர் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களது பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் உரிய சூழலொன்றை உருவாக்குவதாகும். பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் துருசவிய நிதியம் போன்ற நிறுவனங்களினூடாக மீளாய்வின் கீழான ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களினூடாக தரம்மிக்க மற்றும் போதியளவான விளைவுப் பெருக்க செய்கையாக தொடர்ந்தும் இறப்பர் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டில் 128,120 ஹெக்டயர் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச்செய்கை பரந்து காணப்பட்டதோடு, அதில் 79,604 (62 வீதம்) ஹெக்டெயர்கள் சிறு இறப்பர் தோட்டப் பிரிவுக்குரியனவாகும். மேலும் 46,943 (36.6 வீதம்) பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள் 19 உள்ளதோடு, 1,573 ஹெக்டெயர் (1.4 வீதம்) அரச நிறுவனங்களின் கீழுள்ளன. இந்த செய்கைக் காணிகளில் முதிர்ச்சியடைந்த அதாவது இறப்பர் பால் வெட்டும் இடக் காணிகளின் அளவு 101,700 ஹெக்டெயர்களாகும் (79.4 வீதமாகும்).

வருட ஆரம்பத்தில் அறிக்கை செய்யப்பட்ட 158,198 மெற்றிக் தொன் உடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்கான ஆண்டில் இறப்பர் உற்பத்தி 152,050 மெற்றிக் தொன்னாக 3.9 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கான பிரதான காரணமாகவமைந்தது, 2012 ஆம் ஆண்டில் மரபு ரீதியான இறப்பர் பயிச்செய்கைப் பிரதேசத்தில் காணப்பட்ட அதிக மழைவீழ்ச்சி இறப்பர் பால்வெட்டும் தினங்கள் குறைந்ததோடு, 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட அறிக்கை செய்யப்பட்ட உயர் விலைகளுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் இறப்பரின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையுமாகும். 2012 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் உற்பத்தியில் சீட் இறப்பர் உற்பத்தி உயர் மட்டத்தை அடைந்ததோடு, ஆண்டினுள் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த சீட் இறப்பரின் அளவு 59,242 மெற்றிக் தொன்களாகும் (39 வீதம்). 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு வகை இறப்பர் உற்பத்திகளின் அளவு உரு 3.2 இல் காட்டப்பட்டுள்ளது.

## 3.2 வரைபுத் தரவுகள்

### 2011 ,2012 வருடங்களில் இறப்பர் உற்பத்தியில் விகிதாசராம்





2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் உற்பத்திக்கு அதிக பங்களிப்புச் செய்த சீட் இறப்பர் மற்றும் லேட்டஸ் குரோப் இறப்பர் உற்பத்தி முறையே 1457 மெ.தொ. (2.4 வீதம்) மற்றும் 23,383 மெ.தொ. (39 வீதம்) எனக் குறைவடைந்துள்ளது. மீளாய்வுக் காலத்தில் காணப்பட்ட அதிக மழைவீழ்ச்சி மற்றும் முன்னைய வருடத்தோடு ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்த விலைகள், சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களது உரிய விவசாய முறைமைகளை பயன்படுத்துவதில் காணப்பட்ட மோசமான தாக்கமும் இதற்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

தேயிலைப் பிரிவைப் போல இறப்பர் பிரிவிலும் உற்பத்திக்காக அதிக பங்களிப்பைச் செய்வது சிறு தோட்ட உரிமையாளர்களாகும். தேசிய இறப்பர் உற்பத்திக்காக அவர்களின் பங்களிப்பு 80 வீதமாகவுள்ளது. தேசிய உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு தொடராக வழங்கப்பட்ட உர நிவாரணம் 2011 ஆம் ஆண்டின் மே மாதமளவில் கூட்டுத்தாபன தெரிவுக்கும் வழங்கப்பட்ட உர நிவாரணம் காரணமாக மோசமான காலநிலை என்பனவும் ஒப்பீட்டு ரீதியான குறைவான விலை என்பவற்றுக்கிடையிலும் 2012 ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்தியில் பாரிய குறைவு ஏற்படவில்லை.

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் அனைத்து விதமான இறப்பர் வகைகளதும் சாதாரண விலைகளில் குறைவொன்று ஏற்பட்டது. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அனைத்து விதமான இறப்பர் வகைகளுக்குமான கொழும்பு இறப்பர் ஏல விற்பனையில் அறிக்கை செய்யப்பட்ட விலை உரு 3.3 இல் காட்டப்பட்டுள்ளது.

## 3.3 வரைபுத் தரவுகள்

### 2011 , 2012 வருடங்களில் பல்தரப்பட்ட இறப்பர் வகைகளின் ஏல விலை




பு

2012 ஆம் ஆண்டில் சர்வதேச சந்தைகளில் மேலதிக இறப்பர் காணப்பட்டமை, கிழக்காசியாவில் பிரதான டயர் உற்பத்திச் சந்தைகளில் ஏற்பட்ட கேள்வி வீழ்ச்சியுடனும் ஏனைய இயற்கை இறப்பர் உற்பத்தி செய்த நாடுகளின் இறப்பர் கைத்தொழிலில் ஏற்பட்ட அபிவிருத்தியும் இவ்வாறு இறப்பர் விலைகள் வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்தின.

மீளாய்வின் கீழான ஆண்டில் அரசாங்கத்தினால் இறப்பர் மீள் நடுகைக்காகவும், புதிய பயிர்ச் செய்கைக்காகவும் முறையே ஒரு ஹெக்டயருக்கு ரூபா. 175,000 மற்றும் ரூபா. 150,000 நிவாரண உதவியாக வழங்கியமை பயிர்ச்செய்கையின் அபிவிருத்திக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இந்த திருத்தியமைக்கப்பட்ட நிவாரண உதவியின் கீழ் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் இறப்பர் புதிய பயிர்ச்செய்கை மற்றும் மீள் பயிர்ச்செய்கைக்காக நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதோடு, அதிகரித்த நிவாரண உதவி காரணமாக இறப்பர் செய்கை தொடர்பில் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் மேலும் கவனம் செலுத்தினர். மீளாய்வின் கீழான ஆண்டில் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் இறப்பர் மீள்நடுகை நிதியுதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா. 162 மில்லியன் நிதியுதவியின் மூலம் இறப்பர் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்த பிரதேசத்தின் அளவு 2,161 ஹெக்டெயராகும். இதில் 1,117 ஹெக்டெயர் அதாவது, 51.7 வீதம் மரபு ரீதியான பிரதேசங்களில் சிறு இறப்பர் தோட்டப் பிரிவாகவிருந்ததோடு, 1,044 ஹெக்டயர்கள் அதாவது 48.3 வீதம் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய கூட்டுத்தாபனப் பிரிவுக்கு உரித்தாகவிருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டில் மரபு ரீதியான மற்றும் மரபு ரீதியற்ற பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட இறப்பர் புதிய பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிவாரணத்தின் பெறுமதி ரூபா. 125.43 மில்லியனாகவிருந்ததோடு, பயிர்ச்செய்கை செய்யப்பட்ட நிலத்தினளவு 2,475 ஹெக்டயர்களாகும். இவற்றில் 1,018 (41 வீதம்) ஹெக்டயர்கள் மரபு ரீதியான பிரதேசங்களிலும் 251 ஹெக்டயர் (8 வீதம்) மரபு ரீதியற்ற பிரதேசங்களிலும மேற்கொள்ளப்பட்டன. மேலும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் (IFAD) கீழ் மரபு ரீதியற்ற மொணராகலை மாவட்டத்தில் 1,027 ஹெக்டயர்களிலும் (41.5 வீதம்)

பயிர்ச்செய்கையினை மேற்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க வெற்றியாகவிருந்தது. அதேபோல் கூட்டுத்தாபனப் பிரிவின் 179 ஹெக்டயர் (7 வீதம்) புதிதாக இறப்பர் பயிரிடப்பட்டது.

மேலும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், துருசவிய நிதியம், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிதியம் என்பவற்றால் 2012 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் காரணமாக இறப்பர் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுள் உரப் பாவனை, மழை காப்புப் பாவனை, தரமிக்க இறப்பர் சீட் உற்பத்தி, தொழில்நுட்பம் சார் அறிவைப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றில் தொடரான முன்னேற்றமும் காணப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் இறப்பர் ஏற்றுமதியினூடாக பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணியின் அளவு 125,179 மில்லியனாகவிருந்ததோடு, அது முன்னைய வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானமான ரூபா. 120,644 மில்லியனுடன் ஒப்பிடும் போது 3.8 வீத வளர்ச்சியாகும். பல்வேறு வகையான இறப்பர் ஏற்றுமதிகளின் மூலம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானம் அட்டவணை 3.5 இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.5 அட்டவணை

**2011 , 2012 ஆண்டுகளில் பல்தரப்பட்ட வகைகளில் இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி**

**மில்லியன் ரூபாய்**

| வகை | ஏற்றுமதி பெறுமதி | |
|---|---|---|
| | **2011** | **2012** |
| உடன் இறப்பர் | 22,811 | 15,726 |
| குறை முடிவுப்பொருள் | 2,664 | 5,532 |
| முடிவுப்பொருள் | 95,169 | 103,921 |
| **மொத்த கூட்டுத்தொகை** | **120,644** | **125,179** |

மேலும் 2012 ஆம் ஆண்டில் பச்சை இறப்பர் ஏற்றுமதியானது 37,377 மெற்றிக்தொன்னாகவிருந்ததோடு, அது வருடத்தின் மொத்த இறப்பர் உற்பத்தியான 152,050 மெற்றிக் தொன்னுக்கு எதிராக 2.5 வீத பெறுமதியை காட்டிநின்றது. எனினும் 2011 ஆம் ஆண்டில் பச்சை இறப்பர் ஏற்றுமதியானது 42,605 மெற்றிக்தொன்னாகவிருக்கும் போது மீளாய்வின் கீழான ஆண்டில் பச்சை இறப்பர் ஏற்றுமதியானது 12.3 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கான பிரதான காரணம் 2012 ஆம் ஆண்டில் 110,038 மெற்றிக்தொன் பச்சை இறப்பர் தேசிய ரீதியாக பெறுமதி சேர்ப்புக்குட்பட்டமையாகும். இதன் பிரகாரம் மீளாய்வின் கீழான ஆண்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி ஏற்றுமதியில் ரூபா. 109,453 மில்லியனை ஈட்டித்தந்ததோடு, 2011 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட ரூபா. 97,833 மில்லியனுடன் ஒப்பிடும் போது இது 10 வீத வளர்ச்சியாகும்.

**மொத்த இறப்பர் கைத்தொழிலினதும் அபிவிருத்திக்காக 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

I. மரபு ரீதியற்ற பிரதேசங்களில் இறப்பர் செய்கையை விஸ்தரிப்பதற்காக விசேட நடவடிக்கையெடுத்தல். இதன் கீழ் அம்பாறை மாவட்டத்தின் 10000 ஹெக்டயர் இறப்பர் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, அதனோடு தொடர்புடைய கொள்கை தயாரித்தல், பொருத்தமான இடங்களைப் பெற்றுக்கொள்ளல், கருத்திட்டத்திற்காக பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல், மற்றும் கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னேற்ற மீளாய்வை மேற்கொள்ளல்.

II. வட மாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை விஸ்தரிப்பதற்காக நடவடிக்கைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு பல்வேறு நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பும், கொள்கைகளைத் தயாரித்தல்.

III. இறப்பர் பிரிவின் நாற்றுமேடை அபிவிருத்தி மற்றும் கன்றுகளின் சிறந்த வளர்ச்சிக்கான விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்தலும் நாற்றுமேடைத்துறையில் பரிசோதனைகளை மேற்கொள்ளலும்.

IV. இறப்பர் செய்கை தொடர்பான தரப்புக்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

V. இறப்பர் பயிர்ச்செய்கையில் மழைக்காப்பைப் பயன்படுத்துவதைப் பிரபல்யப்படுத்துவதை ஆரம்பிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் கண்காணிப்புச் செய்தலும், வாய்ப்புக்களை வழங்கலும்.

VI. இறப்பர் பிரிவின் நடவடிக்கைகளுக்குத் தேவையான கொள்கை ரீதியான வழிகாட்டல்களை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

VII. இறப்பர் புதிய செய்கை, மீள் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்படுகின்ற நிவாரணத்தை அதிகரிப்பதோடு தொடர்புடைய ஒழுங்குவிதிகளை இடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

VIII. மரபு ரீதியற்ற பிரசேதங்களில் பயிர்ச்செய்வதற்குப் பொருத்தமான காணிகளை இனங்காண்பதற்கான பரிசோதனையை தொடர்ந்து மேற்கொள்ளலும், வட மாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கைக்கான சாத்தியப்பாடு பற்றிய பரிசோதனைகளை தொடர்ந்து பரப்புவதன் மூலமாக பயிர்ச்செய்வதற்குரிய பிரதேசங்களாக வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

IX. 2012 ஆம் அண்டின் வரவுசெலவுத்திட்ட யோசனைகளுக்கு ஏற்ப அம்பாறை மாவட்டத்தில் 10,000 ஹெக்டயர் அளவில் புதிதாக இறப்பர் செய்கையை விஸ்தரிப்பதற்குத் தேவையான இடங்களை அடையாளம் காணல், காணிகளை விடுவித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், கருத்திட்ட நடவடிக்கை மற்றும் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைக்கான ஏற்பாடு செய்தல்.

X. மரபு ரீதியற்ற பிரதேசங்களில் கன்றுகளை வழங்குவதற்காக பதியத்தலாவை பிரதேசத்தில் புதிய நாற்றுமேடை இடமொன்றை ஆரம்பிப்பதற்கு காணியை சுவீகரித்து ஆரம்ப நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல்.

XI இறப்பர் செய்கையில் மழை காப்பைப் பயன்படுத்துவதை விஸ்தரிப்பதற்காக சிறு தோட்ட உரிமையாளர்களுக்குப் போல் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் வழங்கப்படுகின்ற நிவாரணத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தலும், அது பற்றிய அறிவுறுத்தலை மேலும் முன்னெடுத்துச் செல்லலும்.

XII திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா. 18.4 மில்லியன் செலவிற்கு சிறு விவசாயிகளுக்காக இறப்பர் கன்றுகளை வழங்குதல், ஊடிடைப் பயிர்களாக பழக்கன்றுகளை வழங்கல், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 20528 பால் வெட்டும் கத்திகளை வழங்குதல், சிறு கைத்தொழிலாளர்கள் 5 பேருக்கு ஊக்கமளித்தல், மற்றும் ரெடிகல்ல, ஹெட்டபான, கரவிட்ட குடியிருப்பு, பந்தனிய போன்ற பிரதேசங்களில் கூட்டு தயாரிப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கையெடுத்தலும் இறப்பர் செய்கையை வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை ஒன்றாகப் பிரபல்யப படுத்துவதற்கான நடவடிக்கையெடுத்தலும்.

XIII. அரசாங்கத்தின் இறப்பர் நாற்று மேடைகளின் உட்கட்டமைப்பு வசதிகளில் அபிவிருத்தி மற்றும் கன்று உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளல்.

XIV. இறப்பர் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் முதிர்ச்சியற்ற சந்தர்ப்பங்களில் ஊடிடைப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்தலும் அதற்கான உரிய வசதிகளை வழங்கலும்.

XV. பால் வெட்டுபவர்களை பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் களத்தினுள்ளே சென்று தொடர்ந்தும் மேற்கொள்ளல்.

XVI. சிறந்த விவசாய பரீட்சையம் மற்றும் உரமிடுதலுக்கான உரிய முறைமை பற்றி விவசாயிகளுக்கு அறிவூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

XVII. கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுடன் குறிப்பிட்ட மாவட்டங்களுக்குச் சென்று விவசாயிகளின் கூட்டங்களை நடாத்தி அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தலும் அவர்களது கருத்துக்களையும் ஆலோ-ாசனைகளையும் எதிர்காலத்தில் பெற்றுக்கெள்ளலும்.

## 3.3 கட்டுபொல் ( பாம் எண்ணைய்) மரசெய்கைத்துறை

பாம் எண்ணைய் மர செய்கையின் நோக்காக இருந்தது யாதெனில் உள்நாட்டு சாப்பிடத்தக்க எண்ணெய் தேவைப்பாட்டை நிறைவேற்றிக்கொள்வதற்காக வணிக பயிர்களாக பாம் எண்ணெய் மர செய்கை அபிவிருத்தி செய்வதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பொன்றை செய்வதும் சாப்பிடத்தக்க எண்ணெய் இறக்குமதிக்கு செலவாகின்ற வெளிநாட்டு செலாவணியை சேமிப்பதுமாகும். 7,533 ஹெக்டெயர் காணியளவில் பாம் எண்ணைய் மர செய்கை பரந்து காணப்படுவதோடு அந்த பயிர்செய்கை அளவு காணியில் 7,514 ஹெக்டெயர் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் கீழும் 18.85 ஹெக்டெயர் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கீழும் தொழிற்பட்டன.

### 3.6 அட்டவணை

**பார்ம் ஒயில் (கட்டுபொல்)**
**பயிர்ச்செய்கையின் விரிவு பற்றிய தரவு**

ஹெக்டேயர்.

| பெருந்தோட்டக் கம்பனியின் பெயர் | முதிர்ந்த பயிர்ச் செய்கையுடன் காணிகளின் விஸ்தீரணம் | முதிர்ச்சியடையாத பயிருடன் காணிகளின் விஸ்தீரணம் | மொத்த காணிகளின் விஸ்தீரணம் |
|---|---|---|---|
| அகலவத்தை | 947.00 | 354.00 | 1301.00 |
| வட்டவலை | 1909.51 | 1161.6 | 3071.11 |
| நமுனுகுல | 1061.21 | 536.29 | 1597.50 |
| எல்பிட்டி | 781.63 | 427.82 | 1209.45 |
| கொட்டகல | - | 334.76 | 334.76 |
| இ.அ.பெ.கூட்டுத்தாபனம் (SLSPC) | 18.85 | - | 18.85 |
| | **4,718.20** | **2,814.47** | **7,532.67** |

பெருந்தோட்ட கம்பனிகளில் பாம் எண்ணைய் மர பயிர்செய்கை பண்ணும்போது தேவையான விதை தீர்வை வரி நிவாரணத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கு தேவையான பரிந்துரைகளை வழங்குவதும் பாம் எண்ணெய் மர செய்கையினால் பெற்றுக்கொள்ள முடியுமான பயனையும் அதனை விஸ்தரிப்பதன் முக்கியத்துவத்தையும் பற்றி செய்யப்படுகின்ற ஆராய்ச்சி மற்றும் விளம்பர நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது இந்த அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது அதற்கமைய 2012 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட கம்பனிகளில் செய்கைபண்ணுவதற்கு தேவையான 176,000 விதைகள் வரித் தீர்வை நிவாரணத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டள்ளது.

## 3.4 வெளிநாட்டு கடன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்கள்

### 3.4.1. சிற்றளவு பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

சிற்றளவு பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் ஊடாக (IFAD) இலங்கை அரசின் ஆலோசனையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. அதன் மூலம் மத்திய மலைநாட்டு பகுதியில் எல்லைப்பகுதியில் காணி உரிமையாளர்கள் சிறு தேயிலை பெருந்தோட்டகாரர்கள் மற்றும் மொணராகலை பிரதேசத்தில் இடை மத்திய வலய இறப்பர் செய்கைக்காக ஈடுபட ஆர்வமுள்ள மேட்டுக்காணி பயிர்வகை செய்கையில் ஈடுபட்டுள்ள வறிய விவசாயிகளின் வருமான மட்டத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் நிரந்தரமாக உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டதின் நோக்கம் யாதெனில் சிறிய அளவு பயிர் செய்கையாளர்களது வாழ்வாதாரத்தையும் சமூக நிலையையும் நிரந்தரமாக மேம்படுத்துவதாகும். கீழ் மட்டத்தில் குழுக்களை தாபிப்பதன் ஊடாக நன்மைபெறுநர்களின் சாத்தியவளத்தன்மை மற்றும் ஆற்றல்களை பலப்படுத்துதல், காணி உரிமையை பற்றிய அதிகரித்தலும் காணி வளத்தன்மைக்கு ஏற்றவாறு வினைத்திறன்மிக்க மற்றும் நிலையான சிற்றளவு செய்கை முறைமையை (smallholder farming systems) அபிவிருத்தி செய்தலும் உயர் முகாமைத்துவ தொழில்நுட்பத்துடன் கூடிய பொருத்தமான பயிர் மற்றும் கால்நடை வள மாதிரிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் காணி விளைவுப் பெருக்கத்தை மேம்படுத்தல், பின் அறுவடை கட்டுப்பாடு, களஞ்சியப்படுத்தல், பதனிடல், விற்பனை மற்றும் அரச மற்றும் தனியார் துறை பங்கான்மைகளை மேம்படுத்துவதன் மூலமாக உற்பத்தியாளர்களது இலாபத்தை அதிகரித்தல், பெறுமதிசேர்க்கப்பட்ட மற்றும் நன்மைபெறுநர்களினால் விவசாய மற்றும் வருமானம் உழைக்கும் செயற்பாடுகளுக்காக நிதி முதலீட்டை மேற்கொள்வது வரையான விஸ்தரிக்கப்பட்ட கிராமிய நிதி மற்றும் கடன் சேவைகள் போன்றவற்றை இலக்காக கொண்ட தலையிடுகைகள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

கொழும்பில் அமைந்தள்ள தேசிய நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலகு, கம்பொலையில் அமைந்துள்ள மலைநாட்டு உப நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் மொனறாகலையில் அமைந்துள் மொனறாகளை உப நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு என்பவற்றின் மூலம் சிறு பெருந்தோட்ட உரிமையாளர் தொழி-ல்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித்திட்டதின் மொத்த செலவினம் 28.04 மில்லியன் அ.டொ ஆக இருப்பதோடு அது விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் (அ.டொ. 22.540 மில்லியன்) இலங்கை அரசாங்கத்தின் (அ.டொ 3.763 மில்லியன்) நன்மை பெறுநர்களின் (அ.டொ. 1.0103 மில்லியன்) மற்றும் பங்கேற்பு நிதி நிறுவனங்களின் (அ.டொ. 0.715 மில்லியன்) நியங்களை கொண்டிருக்கின்றது. இந்த நி-கழ்ச்சித்திட்டங்களை ஐந்தாவது ஆண்டு 2012 திசம்பர் மாதத்துடன் நிறை-றவடைகின்றது.

### 3.4.1.1. 2012 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்

2012 அம் ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கிடு ரூபா 573 மில்லியனாக இருப்பதோடு செலவினம் 450.09 மில்லியனாகும் அதாவது 2012 ஆம் ஆண்டில் ஓதுக்கீட்டுடன் ஒப்பிடும்போது 79 வீத நிதி முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. அதே போல் 2012 திசமபர் இறுதியளவில் 44 வீத மொத்த நிதி முன்னேற்றத்தை அடை-

டயமுடிந்தது. 2012 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம் இதைவிட கூடிய பெறுமதியொன்றை எடுப்பதற்கு இருந்தபோதிலும் மொணராகலை இறப்பர் செய்கை நிகழ்ச்சித்திட்டம் நவம்பர் மாதம் ஆரம்பமாகும் மழையுடன் அமுல்படுத்தப்பட வேண்டுமென்பதன் காரணமாக பௌதீக முன்னேற்றத்தை அடைய முடிந்தபோதிலும் சில பணிகளுக்கு நிதி கொடுப்பனவு அடுத்த வருடத்திற்கு நகர்ந்தமை இதற்கான காரணமாகும்.

### 3.7 அட்டவணை

### சிறு பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதித்தகவல்கள்

ரூபாய் மில்லியன்

| மானிய நிறுவனங்கள் | மொத்த முன்னேற்றம் | | | 2012 ஆண்டின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த மதிப்பீட்டில் கிரயம் | 2012 நான்காவது காலாண்டின் இறுதியில் மொத்த செலவு | 2012 நான்காவது காலாண்டின் இறுதியில் பயன் பாட்டிற்கு எடுக்கப் பட்டவை % | 2012 ஆண்டிற்கான வரவு செலவு ஏற்பாடு | 2012 நான்காவது காலாண்டின் இறுதியில் செலவு | 2012 நான்காவது காலாண்டின் இறுதியில் செலவு % |
| இலங்கை அரசு | 383.98 | 93.01 | 24% | 37.00 | 25.08 | 68% |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 2,300.79 | 1082.08 | 47% | 486.00 | 378.19 | 78% |
| பங்கேற்ற நிதி நிறுவனம் | 73.06 | 20.68 | 28% | 20.00 | 14.36 | 72% |
| பயனாளிகளின் பங்களிப்பு | 103.06 | 69.63 | 68% | 30.17 | 32.45 | 108% |
| **மொத்தம்** | **2,860.89** | **1,265.40** | **44%** | **573.17** | **450.09** | **79%** |

## 3.4.1.2 2012 ஆண்டில் பௌதிக முன்னேற்றம்

2012 ஆண்டில் உப நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ மட்டத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் 3.8 அட்டவணையில் பொழிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3.8 அட்டவணை

### 2012 ஆண்டின் வருடாந்த வேலைத்திட்டம் அத்துடன் வரவுசெலவிற்கு ஒப்பீடாக அளக்கப்பட்ட பௌதிக முன்னேற்றம்

| | வருடாந்த திட்டமிடலும் வரவுசெலவு இலக்கும். | பெற்றுக்கொண்ட பௌதிக முன்னெற்றம். | முன்னேற்றம் % |
|---|---|---|---|
| 1. அமைக்கப்பட்ட குடிமக்கள் குழு எண்ணிக்கை (மத்தியநாட்டு முயற்சியாண்மை குழு மற்றும் மொனராகலை கிராமிய இறப்பர் அபிவிருத்தி பிரிவு ( VRDCs) | 110 | 110 | 100 |
| 2. அமைக்கப்பட்ட குடிமக்கள் குழுக்களில் உள்ள நபர்களின் எண்ணிக்கை | 2800 | 1525 | 54.5 |
| 3. நிதி செலுத்திய சரிப்படுத்தல் நன்கொடைகளின் எண்ணிக்கை | 252 | 450 | 178 |
| 4. வருமானம் ஈட்டும் செயற் மற்றும் பயிர் உற்பத்தி பகுதி மற்றும் தொழில்நுட்பம் பற்றிய பயிற்றுவிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | 1850 | 1730 | 93.5 |
| 5. (மத்திய) பதிவுசெய்யப்பட்டள்ள நிலுவையும் கடன்குழுக்களின் எண்ணிக்கை | 75 | 47 | 62.6 |
| 6. 2012ஆண்டில் உருவாக்கப்பட்ட / புணருத்தாரணம் செய்யப்பட்ட சகல பெருந்தெருக்களின் நீள அளவு (கி.மீ) | 18.5 | 19.24 | 104 |
| 7. (மத்திய) முடிக்கப்பட்ட குடிநீர் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 5 | 5 | 100 |
| 8. அனுபவத்தை பகிர்ந்துகொள்ளுவதற்கான சுற்றுலா ( exposure visits) எண்ணிக்கை | 6 | 4 | 66.6 |
| 9. தேயிலை மீள் பயிர்ச்செய்கை நிகழச்சித்திட்டம் (மத்திய) | | | |
| • முகாமைத்துவ பகுதியின் கீழ் தேயிலைக் காணிகளின் அளவு (ஹெக்) | 66 | 55 | 83.3 |
| • 2012 ஆண்டில் மீள் பயிர்சசெய்யப்பட்ட தேயிலைக்காணிகளின் அளவு (ஹெக்) | 40 | 47 | 117.5 |
| • ஊடுபயிர்ப்பண்ணப்பட்ட தேயிலைக்காணிகளின் அளவு (ஹெக்) | 100 | 110 | 110 |
| • காய்கறி / பழங்கள் பயிரிடப்பட்ட காணி அளவு (ஹெக்) | 80 | 85 | 106.3 |
| 10. இறப்பர் பயிர் நிகழ்ச்சித்திட்டம் (மொனராகலை) | | | |
| • முகாமைத்துவ பகுதியின் கீழ் தேயிலைக் காணிகளின் அளவு (ஹெக்) | 3,797 | 2868 | 75.5 |
| • பயிர் மாதிரித்தோட்டங்களின் கீழ் காணியின் அளவு (ஹெக்) ➢ இறப்பர் தனிப்பயிர் | 900 | 1026.8 | 114 |
| ➢ கொக்கோவுடன் இறப்பர் | 200 | 93.36 | 46.7 |
| ➢ பழங்களுடன் இறப்பர் | 50 | 30 | 60 |
| ➢ சோளத்துடன் (பணப்பயிர்) இறப்பர் | 200 | 364.4 | 182.2 |
| ➢ ஔடத பயிர்களுடன் இறப்பர் | 10 | 1.07 | 10.7 |
| 11. பின்உற்பத்தி பதனிடல் மற்றும் விற்பனை பற்றிய பயிற்றப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | 472 | 493 | 104.4 |
| 12. அமைக்கப்பட்ட விற்பனை குழுவின் எண்ணிக்கை | 19 | 24 | 126.3 |
| 13. ஸ்தாபிக்கப்பட்ட விற்பனை அலைவரிசை தொடர்பான எண்ணிக்கை | 15 | 10 | 66.6 |
| 14. வியாபாரம் மற்றும் முயற்சி பற்றி பயிற்றப்பட்ட நபர்களது எண்ணிக்கை | 1570 | 1334 | 85 |
| 15. பங்கேற்ற நிதி நிறுவனங்களால் வெளியிடப்பட்ட கடன் எண்ணிக்கை | 672 | 822 | 122.3 |
| 16. பங்கேற்ற நிதி நிறுவனங்களால் மீள்நிதி செய்யப்பட்ட கடன் பெறுமதி (ரூ.மி) | 80 | 57.432 | 71.8 |
| 17. பயிற்றப்பட்ட நிதி நிறுவனங்களின் பணிக்குழாம் (ஆண்/பெண்) | 30 | 43 | 143 |
| 18. கருத்திட்டத்திற்கு பங்கேற்றும் நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை | 7 | 7 | 100 |
| 19.செயற்பாட்டு கடன் கொள்வனவாளர்களது எண்ணிக்கை (ஆண்/பெண்) | 672 | 670 | 99.7 |
| 20. கருத்திட்ட சேவைகளை பெறும் நபர்களது எண்ணிக்கை (ஆண்கள்) | | 4364 | |
| 21. கருத்திட்ட சேவைகளை பெறும் நபர்களது எண்ணிக்கை (பெண்கள்) | | 1739 | |
| 22. கருத்திட்ட சேவைகளை பெறும் நபர்களது எண்ணிக்கை (ஆண்களும் பெண்களும்) | | 6103 | |

2012 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டின் நிறைவின் போது, நிகர்த்த நிறையிட்ட (feasible weighted) மொத்த பௌதீக முன்னேற்றம் சாதரணமாக நூற்றுக்கு 49.5 வீதமாகும்.



சிறு பெருந்தொட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மக்கள் குடிமக்கள் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக மத்தியநாட்டு உப நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ ஒன்றிய தலையீட்டின் கீழ் நுவரெலியா மாவட்டத்தின் தொழுவ பிரதேச செயலகத்தில் அண்மையில் முடிக்கப்பட்ட “நடிசா வழி இல 09”



சிறு பெருந்தொட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்/ மத்தியநாட்டு உப நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ ஒன்றியத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட வருமானம் ஈட்டும் ஓர் செயற்பாடாக காளான் பயிர்ச்செய்கைக்கான ஒருவரது முயற்சி.

மத்தியமலை நாட்டு உப வேலைத்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் 2012 ஆம் ஆண்டில் வருடாந்த வேலைத்திட்டம் மற்றும் பாதீட்டிற்கு சமமாக நூற்றுக்கு 83 வீத செலவு செய்யப்பட்டுள்ளதுடன், மொணராகலை உப வேலைத்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் 2012 ஆம் ஆண்டில் வருடாந்த வேலைத்திட்டம் மற்றும் பாதீட்டிற்கு சமமாக நூற்றுக்கு 77 வீத செலவு செய்யப்பட்டுள்ளது. எனினும் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி இலங்கை மத்தியவங்கியில் டொலர் வங்கிக்கணக்கிலான நிதியானது போதுமானதாக இல்லாமை காரணமாக இறப்பர் கன்றிற்காக மேலதிக 33.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறந்த இன்வொயிஸ் இடம்பெறுகின்றன. அவ்வாறு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துதற்கு மேலதிகமாக, மொணராகலை உப வேலைத்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் 2012 ஆம் நிதி ஆண்டிற்காக நூற்றிற்கு 77 வீத செயலாற்றுகைக்கு சமமாக நூற்றுக்கு 84 வீத செயலாற்றுகை வரை விருத்தி செய்துகொள்ள முடிந்துள்ளது.



சிறு தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் / மக்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொணராகலை உப வேலைத்திட்ட முகாமைத்துவ பிரிவின் நிதியுடன் 2012 ஆம் ஆண்டில் மொணராகலை மாவட்டத்தில் தெலபோகல்லை, வெஹேரகலை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நுழைவுப்பாதைகள்



சிறு தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தியில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் 2012ஆம் ஆண்டு சிறு தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மொணராகலை உப நிகழச்சித் திட்ட முகாமைத்துவ பிரிவின் துணையுடன் புத்தல மஹாகொடயாய கிராம சேவையாளர் பிரிவின் சோளப் பயிர்ச்செய்கையாளர்

மேலும், மொணராகலை உப நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ பிரிவினால் இவ் ஆண்டிற்குள் 1100 ஹெக்டேயர் புதிதாக இறப்பர் பயிர்ச்செய்தலானது மிக வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறே, இவ்வேலைத்திட்டத்தின் ஊடாக வெற்றிடங்களில் நடுகை செய்வதற்காக 200,000 ற்கு அதிகமான கன்றுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வெற்றியுடன் மொணராகலை உப வேலைத்திட்ட முகாமைத்துவ பிரிவினால் டிசம்பர் மாதளவில் அதன் பௌதீக இலக்கை (5000 ஹெக்டெயர்) நூற்றுக்கு 90 வீதம் அடையப்பட்டுள்ளது. வருமானம் ஈட்டும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சுயதொழில் வாய்ப்பு, விலங்கு வேளான்மை, தேயிலை கைத்தொழிற்சாலைக்கான கடனைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற திட்டங்களுக்காக 83 மில்லியன் ரூபாய் (மீள் நிதியாக்கப்பட்டதன் கூட்டுத்தொகை.) பெறுமதியான கடன் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது

# 4. பிரிவுசார் செயலாற்றுகை

## 4.1 நிருவாகப் பிரிவு

நிருவாகப் பிரிவினால் அமைச்சின் அனைத்து நிறுவனசார் மற்றும் உள்ளக நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் கீழ் பாராளுமன்ற வினாக்கள் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல், கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள், பணியாட்தொகுதி நடவடிக்கைகள், அமைச்சின் கீழுள்ள நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான கடமைகள், விளைவுப் பெருக்க முன்னேற்றம் போன்ற கடமைகள் இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

### I. பணியாட்தொகுதியினர் நடவடிக்கைகள் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி)

அமைச்சில் சம்பளம் பெறுகின்ற மொத்தப் பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை 112 பேராகும். இந்த அனைத்து உத்தியோகத்தர்களதும் தனிப்பட்ட கோவை தொடர்பான நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட சம்பள ஏற்றம், இடமாற்றங்கள், விடுவித்தல்கள், ஓய்வுபெறல், விடுமுறை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. அலுவலக உதவியாளர் மற்றும் சாரதி போன்ற சேவைகளில் பதவியினருக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை உரிய தினங்களில் நடாத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

பணியாட்தொகுதியினரின் அறிவு, ஆற்றல் மற்றும் விளைவுப் பெருக்கம் ஆகியவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் பயிற்சிப் பாடநெறிக்காக தொடர்ந்தும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதன் கீழ் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 11 உத்தியோகத்தர்களும், தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2 உறுப்பினர்களும், விடயப் பரப்புகள் தொடர்பான நிகழ்ச்சிகளுக்காகக 10 அலுவலர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகளுக்காக அமைச்சின் 4 உத்தியோகத்தர்களும் கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகளுக்காக அமைச்சின் 7 உத்தியோகத்தர்களும் தற்போது பங்குபற்றுகின்றனர்.

தொழிலற்ற பட்டதாரிகளை அரச சேவையில் ஒன்றிணைக்கும் அரசின் கொள்கைத் தீர்மானத்தின் கீழ் 35 பட்டதாரிப் பயிலுனர்கள் அமைச்சிற்கும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கும் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

### II. கட்டிடங்கள் மற்றும் உபகரண நவடிக்கைகள்.

அலுவலக வளாகத்தைச் சுத்தமாகவும் முறையாகவும் அலங்காரமான முறையிலும் நடாத்திச் செல்வதற்கான பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உத்தியோகபூர்வ வதிவிடங்களில் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குளிரூட்டிகள், கணினி, புகைப்படப்

பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம் போன்றவற்றின் பழுதுபார்த்தல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் நடவடிக்கைகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல் தேவை மதிப்பீட்டிற்குட்பட்டு அதற்கிணங்க தேவையான கணினி மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

### III. போக்குவரத்துச் செயற்பாடுகள்

அமைச்சிடமுள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 48 ஆகும். இந்த வருடத்தினுள் திறைசேரியின் அனுமதியின் அடிப்படையில் அமைச்சிற்காக ஒரு வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதோடு, தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் மூன்று டபள் கெப் வாகனங்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. அமைச்சின் மொத்த அனைத்து நடவடிக்கைகளையும் வினைத்திறனுடன் ஒருங்கிணைப்பதற்காக போக்குவரத்துப் பிரிவான விசேட பங்களிப்பை வழங்கியுள்ளது. மேலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத மோசமான நிலையிலுள்ள 4 வாகனங்கள் ஏல விற்பனைக்கான கேள்விப் பத்திரங்கள் மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### IV. நிறுவனங்களின் தொழிற்பாடுகளும் செயலாற்றுகை நடவடிக்கைகளும்.

அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனங்களில் இலங்கை தேயிலை சபை, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், தேயிலை பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், வரையறுக்கப்பட்ட களுபோவிட்டயான தேயிலைக் கைத்தொழிற்சாலைக் கம்பனி, சிறுதோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தேயிலைச் சக்தி நிலையம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் துருசவிய நிதியம் போன்ற நிறுவனங்களின் நிருவாகம் மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பில் நிருவாகப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நிறுவனங்களின் பணிப்பாளர் சபையை நியமித்தல், பணியாட்தொகுதி நியமிப்பு, சேவை நீடிப்பு, கடமை ரீதியான வெளிநாட்டுப் பயணங்கள், தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணங்கள், வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள், ஆண்டறிக்கை, மற்றும் அந்தந்த நிறுவனங்களோடு தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் போனறனவும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. பணியாட்டொகுதியினரின் பிரச்சினையோடு தொடர்புபட்ட தொழிற்சங்கங்களின் மூலம் அமைச்சுக்கு முன்வைக்கப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதலும் நிரவாகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் (IFAD) மூலம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்குகின்ற சிறு பெருந்தோட்ட தொழ-ில்முயற்சியாளர்களின் தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்காகஅலுவலர்களை இணைத்துக்கொள்ளல் சேவை நீடிப்பு, சம்பள ஏற்றங்களை வழங்கல் மற்றும் அந்த உத்தியோகத்தர்களது தனிப்பட்ட கோவைகளைப் பேணிவருதல் போன்றனவும் நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**V. வினைத்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள்**

வினைத்திறன்மிக்க பொதுமக்கள் சேவையொன்றையும் சுமூகமான அலுவலக வளாகமொன்றையும் அமைத்துக்கொள்வதற்காக அமைச்சின் விளைவுப் பெருக்க அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊழியர் பிரச்சினைகளைக் குறைத்தல், குழு உணர்வை மேம்படுத்தல், நட்புணர்வை வளர்த்துக்கொள்ளல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தராதர நியமங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. விளைவுப் பெருக்கக் கோட்பாட்டை பணியாட்டொகுதியினருள் ஏற்படுத்துவதற்காக அலுவலர்களை அறிவூட்டும் நடவடிக்கைகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது. விளைவுப் பெருக்க கோட்பாட்டை அலுவலகத்திலிருந்து வீடு வரை எடுத்துச்செல்வதற்கான "அலுத் சேர்" அறிக்கை நாடகம் (டொகியுடி(d) ராமா) இந்த வருடத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. அதேபோல் தேசிய விளைவுப் பெருக்கப் போட்டிக்கு முன்வைப்பதற்காக அமைச்சினுள் விளைவுப் பெருக்க மாற்றங்கள் பல இடம்பெற்றுள்ளன.

## 4.2 கணக்குப் பிரிவு

I. 2012 ஆம் ஆண்டில் நிதி முன்னேற்ற இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது. நிதி முன்னேற்றமானது நிகர நிதி ஏற்பாடுகளில் 82 வீதமாகவுள்ளது. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட பணத்தொகையை திறைசேரியிலிருந்து பெறுவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை வரையறை காரணிகளின் அடிப்படையில் நிதி முன்னேற்றத்தை 100 வீதமாக அடைந்துகொள்வது சிரமமானதாகும்.

II. 2012 ஆம் ஆண்டினுள் அரச ஊழியர்களின் முற்பணத்திற்காக பீ கணக்கு அங்கீகரித்த வரையறையினுள் நின்று அமைச்சின் ஊழியர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்றவகையில் ரூபா. 4.5 மில்லியன் வழங்கப்பட்டுள்ளன.

III. திறைசேரியினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த பணத்தை எதிர்பார்க்கப்பட்டவாறு பூரமாணகக் கிடைக்காததன் காரணமாக அது 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு திட்டத்திற்கு ஏற்ப சில பொருட் கொள்வனவுகளை மேற்கொள்ள முடியாத-ிருந்ததோடு, வருடத்திற்கான தேவையான அவசியமான பொருட்கள் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் கொள்வனவு செய்ய முடிந்தது.

IV. 2011 ஆம் ஆண்டில் பொருட்பட்டியல் அளவாய்வு அறிக்கையின் படி பின்னூட்டல் நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டன. 2012.12.31 ஆம் திகதியன்று பொருட்பட்டியல் அளவாய்வு நிறைவுசெய்யப்பட்டதோடு 2012.03.28 ஆம் திகதியன்று அளவாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

V.2012 ஆம் ஆண்டினுள் அமைச்சின் நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்றிருந்த கணக்காய்வு விமர்சனங்கள் 12 இற்கும் பதில்கள் அனுப்பப்பட்டுள்ளன. அமைச்சின் கீழுள்ள சிறு பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையைப் பெற்று தேவையான நடவடிக்கைகளுக்காக இபாட் நிறுவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

VI. 2012 ஒதுக்கீட்டுக் கணக்கு அரச ஊழியர் முற்பண பீ கணக்கு 2011.03.28 ஆம் திகதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 4.3 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

**<u>உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகள்.</u>**

I. அமைச்சின் அனைத்துப் பிரிவுகளினதும் (கருத்திட்டங்கள் உள்ளிட்ட) நிறுவன மற்றும் கணக்கு நடவடிக்கைகளை கணக்காய்வு செய்தலும் அறிக்கை செய்தலும்.

II. தவறு மற்றும் ஊழல் என்பவற்றைத் தவிர்ப்பதற்காக அமைச்சினுள் செயற்படுகின்ற நிருவாக முறைமைத் திட்டத்தினாலும் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரமும் வெற்றிகரமானதா என்பதை ஆராய்தலும் அது பற்றிய கண்காணிப்பையும் ஆலோசனையும் முன்வைத்தலும்

III. கணக்கு மற்றும் ஏனைய அறிக்கைகளில் வெளிப்படைத்தன்மையை மதிப்பீடு செய்துகொள்ளுதல், அமைச்சின் சொத்துக்களை அனைத்துவிதமான நட்டங்களிலிருந்தும் உச்சபட்ச ரீதியாக பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை செய்தல்.

IV. களுபோவிட்டியான தேயிலைக் கம்பனி சிறிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் மற்றும் துருசவிய நிதியம் போன்றவற்றின் நடவடிக்கைகளைக் கணக்காய்வுசெய்தலும் அறிக்கை செய்தலும்.

V. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் பின்வரும் நடவடிக்கைகள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு செய்வதற்காக 3 மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தல்.

அ. உள்ளக கணக்காய்வு பிரிவகளின் நடவடிக்கைகள்.

ஆ. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்படுகின்ற கணக்காய்வு விமர்சன அறிக்கைக்கான பதில்களை வழங்கல்.

இ. ஒவ்வொரு நிறுவனத்தினதும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்களை நடாத்தல்.

ஈ. வருடாந்த பொருட்கொள்வனவுத் திட்டத்தைச் செயற்படுத்தல்.

உ. நிருவாக அறிக்கை, வருடாந்த அறிக்கையைத் தயாரித்தல்.

ஊ. வருடாந்த பொருட்பட்டியல் அளவை மேற்கொள்ளல்.

எ. ஒவ்வொரு நிறுவனத்தினதும் தனிப்பட்ட நிதி நடவடிக்கைகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகள்.

VI. அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்களது பணித்திட்டங்களுக்கு உட்பட்டதாக செயற்படுவதற்கு தாமதங்களுக்குக் காரணமாகவுள்ள பிரச்சினைகள் சார்ந்த துறைகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்தலும் அவற்றை அறிக்கை செய்தலும்.

VII. தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களது செயற்பாடுகள் தொடர்பில் விசேட பகுப்பாய்வுகளை நடாத்துதலும் அறிக்கை செய்தலும்.

**<u>உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகளின் முன்னேற்றம்.</u>**

I. அமைச்சின் கீழுள்ள சிறு பெருந்தோட்ட தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய மொனராகலை உப அலுவலக நடவடிக்கைகள் தொடர்பிலான கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அங்கு வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள்.

II. அ.) களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலையின் தேயிலை விற்பனை தொடர்பான கணக்காய்வு விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதோடு, அதனடிப்படையில் வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆ.) தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நிறுவனம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் வாகனப் பராமரிப்பு தொடர்பில் கணக்காய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அதற்கமைய வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இ.) துருசவிய நிதியத்தினால் துருசவிய சங்கங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குதல் தொடர்பில் கணக்காய்வுப் பரிசோதலை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அங்கு வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

III. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் 4.3(V) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வை மேற்கொள்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் மூன்று (3) நடாத்தப்பட்டுள்ளதோடு,

அங்கு நிறுவனம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பது பற்றி பின்னூட்டல் நடவடிக்கைகளும் தொடராக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

IV. அமைச்சின் களஞ்சியத்தினுள் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் ஏனைய பிரிவுகளின் பொருட்களது பாதுகாப்புத் தொடர்பில் ஆராய்ந்து அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகள் உள்ளிட்ட அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் தற்போது அமைச்சில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

V. சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தேயிலைச் சக்தி நிலையம், களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி போன்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கேற்ப விசேட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்புடைய அறிக்கையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 4.4 அபிவிருத்திப் பிரிவு

2012 ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பிரிவினால் தேயிலை மற்றும் இறப்பர் செய்கை அபிவிருத்திக்காகவும் அந்த செய்கையுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் அபிவிருத்திகள் தொடர்பிலும் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

I. 140 வருடங்களுக்கும் அதிகமான பெருந்தோட்டக் கைத்தொழில் வரலாற்றில் முதற்தடவையாக தேசிய பெருந்தோட்ட விருது வழங்கல் வைபவமொன்று 2012 ஆம் ஆண்டில் அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் நடாத்துதல். இந்த வைபவத்திற்காக போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வைபவங்களை ஏற்பாடு செய்கின்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஆரம்பத்தில் அடிப்படைச் செயற்பாடுகள் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

II. 2012.10.06 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் சட்டங்கள் நவீன தேவைப்பாடுகளுக்கேற்ற வகையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல். இது தொடர்பில் அமைச்சரவையினால் அமைச்சு செயலாளரின் தலைமையின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, மற்றும் மத்திய வங்கியின் பிரதிநிதிகளின் பங்கேற்படன் தாபிக்கப்பட்டுள்ள குழுக்களை அழைத்தல், தீர்மானங்களைச் செயற்படுத்தலும் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளும் நடவடிக்கைகளை எடுத்தலும். இதன் பிரகாரம் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை,

தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், தேயிலை சக்தி நிதியம் போன்ற நிறுவனங்களின் சட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தலும், ஏனைய நிறுவனங்களது திருத்தங்கள் தொடர்பில் இறுதிக் குழுவின் பார்வைகளை பெற்றுக்கொள்ளுதலும் மேற்கொள்ளப்பட்டன.

III. சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சிறு பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் கொள்கைகளை வடிவமைத்தலும், கட்டுபடுத்தலும், மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

IV. 2012 பெப்ரவரி மாதத்தில் அநுராதபுரத்தின் ஓயாமடுவில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக்கு அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களும் பங்குபற்றிமை.

V. நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கொள்கை ரீதியான வழிகாட்டல்களை வழங்கலும், அது தொடர்பில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தலும்.

VI. நிதி ஆணைக்குழு மற்றும் மாகாணசபைகளின் ஒத்துழைப்புடன் 2012ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டத்துறையின் நுழைவை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான அடிப்படைச் செயற்பாடுகளை ஏற்பாடு செய்தலும், குறிப்பிட்ட தீர்மானத்தை எடுக்கும் செயற்பாட்டிற்கான வசதிகளை வழங்கலும்.

VII. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் வெளிநாட்டு உதவியினடிப்படையில் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தலும் உயர் வினைத்திறனைப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும்.

VIII. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.

IX. தேயிலை மற்றும் இறப்பர் தொடர்பில் சர்வதேச அமைப்புக்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைப்புச் செய்தல்.

X. காலநிலை மாற்றங்களின் காரணமாக பெருந்தோட்டத்துறைக்கு ஏற்படுகின்ற தாக்கள் பற்றி நடவடிக்கை எடுத்தல்.

XI. அமைச்சின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கலும், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் நடவடிக்கையும்.

XII. உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளில் தேயிலை விற்பனை, மேம்பாடு என்பவற்றுக்காக தேயிலை ஏற்றுமதியாளர்களின் உதவியோடு ரூபா. 5 பில்லியன் நிதியம் ஒன்றை ஆரம்பித்தல் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

XIII. தேயிலைத் துறையில் தொடர்புடைய தரப்பினருடன் தொடரான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் கலந்துரையாடல்களுடன் அவற்றை மேற்கொள்ளல்.

XIV. தேயிலைத் துறையின் வளர்ப்புப் பொருட்கள் மற்றும் உரக்கலவை தொடர்பில் விசேட குழுவொன்றை நியமித்து பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளல்.

XV. தேயிலை மீள் நடுகை மற்றும் புதிய பயிர்ச்செய்கைக்காக வழங்கப்படும் நிவாரணத்தை அதிகரிப்பதற்கு குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

XVI. கௌரவ அமைச்சருடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களினதும் பிரதான உத்தியோகத்தருடன் மாவட்ட, பிராந்திய மட்டத்தில் தேயிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் தரப்பினரைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தலும், கருத்துக்களையும் பிரேரணைகளையும் பெற்று அதற்கமைய தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

XVII. மரபு ரீதியற்ற பிரதேசங்களில் இறப்பர் செய்கையைப் பரப்புவதற்காக விசேட நடவடிக்கை எடுத்தல். இதன் கீழ் அம்பாரை மாவட்டத்தில் 10000 ஹெக்டயர் இறப்பர் செய்கை மேற்கொள்கை நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல் 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்றதோடு, அதனோடு தொடர்புடைய கொள்கைகளை வடிவமைத்தல் பல்வேறு நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வை மேற்கொள்ளல்.

XVIII. வட பகுதியல் இறப்பர் செய்கையை விஸ்தரிப்பதற்காக தொழிற்பாட்டுக்குழுவொன்றை நியமித்து பல்வேறு நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பும் கொள்கை வடிவமைத்தலும்

XIX. இறப்பர் பிரிவின் நாற்றுமேடை அபிவிருத்தி மற்றும் கன்றுகளின் தர விருத்தி செய்வதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பித்தலும் நாற்றுமேடைகளின் கள பரிசோதனை மேற்கொள்ளலும்.

XX. இறபப்ர் செய்கை தொடர்பில் தரப்பினர்களுடன் ஒருங்கிணைப்பு செய்தல்.

XXI. இறப்பர் புதிய செய்கை மற்றும் மீள்நடுகைக்ககாக வழங்கப்படுகின்ற நிவாரணத்தை அதிகரிப்பதுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

XXII. 2012 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட யோசனைகளுக்கு ஏற்ப அம்பாறை மாவட்டத்தில் 10, 000 ஹெக்டெயர் புதிதாக இறப்பர் செய்கை விஸ்தரிப்பதற்கு தேவையான காணிகளை அடையாளங்காணுதலும் விரிவாக்கல் நடவடிக்கைகள் மற்றும் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகளை ஏற்பாடுசெய்தல்.

XXIII. இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் அமைப்பின் கூட்டங்கள் (ANRPC), சர்வதேச இறப்பர் ஆராய்ச்சி குழுவின் மாநாடுகளில் கலந்து கொண்டு இலங்கையை பிரதிநிதித்துவம் செய்தல் (IRSG) .

## 4.5 திட்டமிடல் பிரிவு

2012 ஆம் ஆண்டில் திட்டமிடல் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பிரதான பணிகளின் சுருக்க விபரம் கீழே தரப்படுகின்றது.

I. 2012 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய அமைச்சின் அமுலாக்க திட்டத்தை தயாரித்து நிதி, திட்டமிடல் அமைச்சுக்கும் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்தல்.

II. அமைச்சின கீழ் உள்ள நிறுவனங்களில் வருடத்தின் ஒவ்வொரு காலாண்டுக்குமான முன்னேற்ற அறிக்கையை தயாரித்து சமர்ப்பித்தல்

III. கௌரவ அமைச்சரினால் நடத்தப்பட்ட 3 முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களுடன் தொடர்பில் நிறுவன மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதற்காக குறிப்பிட்ட அலுவலர்களுக்கு ஆற்றுப்படுத்ததலும் அந்த முன்னேற்ற மீளாய்வுடன் தொடர்புடைய அறிக்கையை தயாரித்தலும் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தலும்.

IV. 2012 ஆம் ஆண்டில் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்ட 15 கருத்திட்ட ஆலோசனைகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தியமை

V. 2012 நவம்பர் 23 ஆம் திகதி நடைபெற்ற பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் வரவுசெலவுத்திட்ட உரையோடு தொடர்பான முன்னேற்ற அறிக்கை 2012 ஐ தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

VI. இலங்கை மத்திய வங்கியின் அண்மைக்கால பொருளாதாரப் போக்குகள் - 2012 மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2012 உடன் தொடர்புடைய பெருந்தோட்டத்துறை முன்னேற்றம் குறிப்பிட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரித்து இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல்.

VII. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஐந்து வருட திட்டத்தை இற்றைப்படுத்தும் செயற்பாட்டை ஒருங்கிணைப்புச்செய்தல்.

VIII. அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையின் கீழ் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுவுக்கு சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குதல்.

IX. பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற திவிநெகும தேசிய அபிவிருதுத்தி நிகழ்ச்சித்திட்டதின் கீழ் ரூபா 28 மில்லியன் செலவிட்டு தேயிலை மற்றும் இறப்பர் துறைகளோடு தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

X. 2011 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்று:கை அறிக்கையை சமர்ப்பித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்காக முன்வைத்தல்

XI. ரூபா 3 மில்லியன் தொகை நிதி ஒதுக்கீட்டின் ஊடாக உலக தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தேயிலை மற்றும் இறப்பர் இடங்களை வரைபடமிடுவதற்காக வழிகாட்டல் கருத்திட்டம் காலி மாவட்டத்தில் ஆரம்பிப்பதுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

## 4.6 பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்புப் பிரிவு

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (ஜனவசம) இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (இ.அ.பெ.கூ) என்பவற்றின் கீழ் நிருவகிக்கப்பட்ட 439 அதிக எண்ணிக்கையிலான தோட்டங்கள் 1992 இல் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள் 23 இன் கீழ் மாற்றப்பட்டு தனியார் மயப்படுத்தப்பட்டன. இந்த தோட்டங்களின் காணிகளின் உரிமை இன்னும் ஜனவசம மற்றும் இ.அ.பெ.கூ என்பவற்றின் கீழ் இருப்பதோடு தோட்டங்களின் நிருவாகமும் பயிர்செய்கையும் 53 வருட குத்தகை அடிப்படையில் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த கம்பனிகளின் தங்க பங்காளராக திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்துவது இந்த பிரிவின் கடமையாகும்.

**<u>பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவின் செயலாற்றுகை -2012</u>**

I. **பிரதேச பெருந்தோட்ட கம்பனியின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற செய்கை பண்ணமுடியுமான எனினும் செய்கை பண்ணப்படாத காணிகளை அடையாளங்காணுதல்.**

(அ) 2011 ஆம் ஆண்டினுள் 20 பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள் செய்கை பண்ணமுடியுமான நிலையில் இருந்தன. எனினும் செய்கை பண்ணப்படாத கம்பனிகள் பற்றிய அளவாய்வின் பின்னர் 2012 வருட ஆரம்பத்தில் மீண்டும் ஒரு முறை கள அளவாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதோடு அதன் இறுதி அறிக்கை 2012.08.31 திகதி

தயாரித்து குறிப்பிட்ட நிறுவனத்திற்கு தேவையான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) சனாதிபதி செயலகத்தின் ஆலோசனையின் பிரகாரம் அடையாளங்காணப்பட்ட காணிகளை வினியோகிப்பதற்காக முறையான பொறிமுறையொன்றை தயாரிப்பதுடன் தொடர்பான பெருந்தோட்ட கைத்தொழில் அமைசச்சு செயலாளரின் தலைமையில் அமைச்சுக்களின் சிரேட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பயிர்செய்கை காணிகள் காணப்படும் மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு அந்த குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை 2012.07.05. திகதி சனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த காணிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் விநியோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## II. பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளிடம் வாடகை அறவிடல்.

(அ) 2012 ஆண்டினுள் திரட்டுவதற்கு மதிப்பிடப்பட்டுள்ள வாடகை தொகை ரூபா 928 மில்லியனாக இருப்பதோடு அத்தொகையில் ரூபா 771 மில்லியன் 2012.12.31. திகதியளவில் அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) 2012.01.01. திகதியன்று முன்னைய வருடத்திற்காக அறவிடப்படவேண்டியிருந்த நிலுவை வாடகை தொகை ரூபா 376 மில்லியனாக இருந்ததோடு 2012.12.31 ஆம் திகதியளவில் அதில் ரூபா 289 மில்லியன் அறவிடப்பட்டது.

## III. பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் நிதி முன்னேற்ற செயலாற்றுகை மீளாய்வு.

பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் காலாண்டு மற்றும் வருடாந்த கணக்குக் கூற்று உரிய முறையில் ஆராய்வதும் மீளாய்வுசெய்வதும் அதன்மூலம் தேவையான இடங்களை சீர்செய்வதற்கு கம்பனிகளுக்கு ஆலோசனை வழங்குவதும் இடம்பெறுவதோடு இது தொடராகவும் முயைாகவும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பெருந்தோட்ட கம்பனிகளில் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் முறைமையொன்று பேணிவரப்படுவதோடு தேவையான தகவல்களை தொடர்புடைய பிரிவுகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

IV. **ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களின் பங்கேற்புடன் பெருந்தோட்ட கம்பனிகளினால் நிருவகிக்கப்படும் தோட்டங்களில் மரங்களை வெட்டுவதற்கான தேவையான அனுமதியை பெற்றுக்கொடுத்தல்**

2012 ஆம் ஆண்டில் 10 பெருந்தோட்ட கம்பனிகளின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற 61 மரம் வெட்டுதல்கள் தொடர்பில் கள பரிசோதனையும் தேவையான ஏனைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக வேறு பல்வேறு சந்தர்ப்பங்களோடு தொடர்புடைய (உதா: உயிர் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கு அச்சுறுத்தலாகவுள்ள மரங்கள், அதி சக்திவாய்ந்த மின்கம்பிகளை இடுவதற்காக அகற்றவேண்டிய மரங்கள், வீடமைப்பு மற்றும் கருத்திட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற ஏனைய பொதுமக்கள் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அகற்றவேண்டிய மரங்கள் மற்றும் பயிர்செய்கைக்கு நிழல்கொடுக்கின்ற தேவையற்ற மரங்கள்) மரங்களை அகற்றுவதற்காக தேவையான அங்கீகாரங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

V. **அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பொது செயற்பாடுகளுக்காக பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளினால் நிருவகிக்கப்படுகின்ற தோட்ட காணிகளை விடுவிப்பதற்கு தேவையான வாய்ப்புக்களின் போது அது தொடர்பில் பெருந்தோட்ட கம்பனிகளின் இணக்கப்பாட்டின் பேரில் தங்கப் பங்கு உரிமையாளர்களது அனுமதியை பெறுவதுடன் தொடர்புடைய நடவடிக்கைளை மேற்கொள்வதும் தேவையான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட கள பரிசோதனைகளை மேற்கொள்வதும்.**

2012 ஆம் ஆண்டினுள் அதிவேகப் பாதை, தொழில்நுட்ப குடியிருப்பு, நீர் வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளுக்காக தோட்ட இடங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் 65 கோரிக்கைகைள் இப்பிரிவுக்கு கிடைக்கப்பெற்று அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதோடு 30 வீடமைப்பு திட்டங்கள், 20 பாடசாலைகள், 03 தோட்ட வைத்தியசாலைகள், 40 மதசார் இடங்கள், 25 தகன மயானங்கள், விளையாட்டு மைதானங்கள், மற்றும் ஏனைய நலனோம்புகை விடயங்களுக்காக 75 கோரிக்கைகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பொது நடவடிக்கைகளுக்காக காணிகளை விடுவிப்பது தொடர்பில் நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள வழக்குகளுடன் தொடர்புடைய 6 கள பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

VI. **அரசுக்கு சொந்தமான இடங்களின் உரிமையை மீண்டும் அரசுக்கு பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அரசச காணிகள் (உரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 23 பெருந்தோட்ட கம்பனிகளினால் நிருவகிக்கப்படுகின்ற தோட்ட காணிகளின் அதிகாரபூர்வமற்ற குடியிப்பாளர்கள் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்**

2012 ஆம் ஆண்டினுள் 23 பெருந்தோட்ட கம்பனிகள் மூலம் நிருவகிக்கப்படுகின்ற தோட்டங்களில் இவ்வாறான 1100 சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து இந்த பிரிவினால் நடவடிக்ககைள் எடுக்கப்பட்டுள்ளன.

**VII.** **அரச மற்றும் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளிடையே நிலவுக்கின்ற வாடகை உடன்படிக்கையின் 4(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் அந்த காணிகள் மூன்றாம் தரப்பினருக்கு நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட பல்வேறு பணிகளுக்காக (உதா: மின்சார கம்பங்களை நிர்மாணித்தல், சிற்றளவு நீர் மின்சார நிலையங்களை நிர்மாணித்தல்) உப குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கும் ஆற்றல் பெருந்தோட்ட கம்பனிகளுக்கு காணப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளை அனுமதியளிக்கப்பட்ட உரிய நடைமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளுதல்.**

அதன்படி 12 காணித்துண்டுகள் தொடர்பில் தங்க பங்கு உரிமையாளர்களிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதோடு இவ்வாறான மேலும் 23 கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**VIII.** பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள் மூலம் நிருவகிக்கப்படுகின்ற தோட்ட மற்றும் தேயிலை தொழிற்சாலைகளின் செயற்பாடுகளையும் அவற்றின் முன்னேற்றத்தை மீளாய்வுசெய்வதற்கும் தோட்ட காணிகளில் அனுமதியற்ற குடியிருப்புக்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்ற வழக்குகளுடன் தொடர்புடைய 15 களப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.

**IX.** நில அளவைத் திணைக்களம் மற்றும் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படவுள்ள தோட்ட இடங்களின் வரிவிதிப்புக்குரிய நிலஅளவை நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக குறிப்பிட்ட ஏற்பாடுகள் 2013 வரவுசெலவுத்திட்டத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

X. அதிமேதகு சனாதிபதிக்கும் கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சருக்கும் தோட்டத்துறை தொடர்பில் பொதுமக்களினால் முன்வைக்கப்பட்ட 775 பல்வேறு முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் அளவு தொடர்பில் பெருந்தோட்ட கம்பனிகளின் ஒத்துழைப்புடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**XI.** கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினது தலைமையில் நடாத்தப்பட்ட தங்க பங்கு உரிமையாளர்களது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு தேயிலை கைத்தொழிலுக்கான உற்பத்தி செலவை குறைத்துக்கொள்வது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழான குழுவொன்றை நியமித்து அதனூடாக குறுங்கால, நடுத்தரகால மற்றும் நீண்டகால உபாயமுறைகள் தொடர்பில் தீர்மானமெடுத்தல் குறித்து நடவடிக்கை எடுத்தல்.

XII. கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரின் தலைமையில் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள், பெருந்தோட்ட உரிமையாளர்களின் சங்கம் மற்றும் ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் மாதத்திற்கு ஒரு முறை நடாத்தப்படுகின்ற தங்க பங்கு உரிமையாளர்களின் கூட்டங்களில் தோட்ட துறைகளில் தேன்றியுள்ள குறுங்கால மற்றும் நீண்டகால பொருளாதார**,** **சுற்**றாடல், சமூக பிரச்சினைகள் மற்றும் அதுதொடர்பில் எடுக்க நடைமுறைரீதியான தீர்வுகள் பற்றி கலந்துரையாடுதல். குறிப்பாக அதிமேதகு சனாதிபதியின் தலைமையின் கீழ் நடாத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களில் தோட்ட துறை தொடர்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து இந்த பிரிவினால் விசேட கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

## 4. 7 தேயிலை, இறப்பர் மற்றும் தென்னங் தோட்ட (காணி துண்டாடல் கட்டுப்பாட்டுச்) சபை

1958 ஆம் ஆண்டில் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை துண்டாடுதல் கட்டுப்பாட்டுச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோதிலும் தென்னந் தோட்டங்களை துண்டாடுதலை கட்டுப்படுத்துவதற்றாக ஏற்பாடுகள் காணப்படவில்லை. அதன் விளைவாக தென்னந்தோட்ட உரிமையாளர்கள் காணி விற்பனை முகவர்களினாலும் எவ்வித கட்டுப்பாடுமின்றி பாரிய அளவு தென்னங் தோட்டங்கள் துண்டாடப்படுதல் மற்றும் விற்பனைசெய்தல் மேற்கொள்ளப்பட்டதோடு அது தேங்காய் உற்பத்தியிலும் தேங்காய் உற்பத்தியுடன் தொடர்புடைய வீழ்ச்சியொன்றுக்கு காரணமாக அமைந்தது. மேலும் இந்த நிலைமை காரணமாக பல்வேறு சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இந்த விடயங்களை கவனத்திற்கொண்டு 2005 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க துண்டாடலை கட்டுப்படுத்தல் சட்டத்தினால் 1958 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க துண்டாடலை கட்டுப்படுத்தல் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 20 ஹெக்டயருக்கு மேற்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களிலும் 4 ஹெக்டயாருக்கு மேற்பட்ட தென்னந் தோட்டங்களது உரிமை-மயை மாற்றுதல், விற்பனைசெய்தல், கொடையாக வழங்குதல் அல்லது மாற்றலுக்காக துண்டாடல் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேற்படி தோட்டங்களை மாற்றுவதற்காக அனுமதியை வழங்கும் அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு உள்ளது.

தனி அலகொன்றாக காணியை ஒப்படைக்கும்போது காணிகள் துண்டுகளாக மாற்றமடையாவிட்டாலும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சபையிடமிருந்து அனுமதி பெறவேண்டுமென்பதாலும் பொதுமகக்கள் அனுபவிக்கநேர்ந்துள்ள சிரமங்களை குறைப்பதற்கும் தாமதமின்றி காணி ஒப்படைத்தல் தேவைப்பாட்டை கருத்திற்கொண்டு இச்சட்டத்தின் 8 (1) (பீ) பிரிவில் மூலம் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் அந்த சட்டத்தின் 3, 5. மற்றும் 8(1) (ஏ) பிரிவுகளின் கீழ் தாக்கமொன்றை ஏற்படுத்தாது என கருதி அந்த பிரிவை திருத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தள்ளதால் தற்போது தென்னங் காணிகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள ஏக்கர் 9 ரூட் 3 பர்சர்ஸ் 21.44 எல்லையை 5 ஏக்கர் வரை குறைப்பதற்காக சட்டவரைஞருடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

**<u>தேயிலை, இறப்பர் அத்துடன் தெங்கு தோட்ட (துண்டாடுதலை கட்டுப்படுத்தல்) சபையின் 2012 ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான முன்னேற்றம்</u>**

I. 2012 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை 12 பணிப்பாளர் சபைக்கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

II. 2012 ஆண்டின் தேயிலை, இறப்பர் அத்துடன் தெங்கு தோட்ட (துண்டாடுதலை கட்டுப்படுத்தல்) சபைக்கு கிடைத்து விண்ணப்படிவங்கள் பற்றிய தகவல்கள்

| மாவட்டங்கள் | விண்ணப்படிவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| குருநாகலை | 204 |
| புத்தளம் | 186 |
| கம்பா | 98 |
| ஏனையவை | 78 |
| **மொத்த விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை** | **566** |

III. 2012 வருடத்தில் பின்வருமாறு கையளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தனி அலகாக கையளிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 110 |
| ஏனைய கையளிப்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 411 |
| வங்கி அடகிற்காக அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணங்களின் எண்ணிக்கை | 25 |
| மறுக்கப்பட்ட விண்ணங்களின் எண்ணிக்கை | 20 |
| 2012 ஆண்டு கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 566 |
| கடந்த ஆண்டு விண்ணப்பங்களில் இருந்த குறைபாடுகளினால் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படாத விண்ணங்கள் 133 | |
| **பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **699** |

**இணைப்பு 1**

## 2012 ஆண்டின் நிதியியல் முன்னேற்றம்

**1. செலவின மதிப்பீடு :** ரூ '000

| | 135 -1-1 அமைச்சரவை அலு-வலகம் | | 135-1-2 நிர்வாகம் மற்றும் நிறுவன சேவை | | 135-2-3 பெருந்தோட்ட அபிவிருத்தி நி-கழ்ச்சித்திட்டம் | | 135-2-4 பெருந்தோட்ட அபிவிருத்தி நிறுவனம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் | மூலதனம் | மீண்டெ-ழும் | மூலதனம் | மீண்டெ-ழும் | மூலதனம் | மீண்டெ-ழும் | மூலதனம் | |
| 1.மதிப்பீட்டு ஏற்பாடு | 53,750 | 8,350 | 55,345 | 12,200 | 32,700 | 547,750 | 814,992 | 505,700 | 2,030,787 |
| 2.நி.பி.66ன் கீழ் பரிமாற்றம் மற்றும் பரிபூரண ஏற்பாடு | 1,011 | 9,555 | (0,066) | 0 | 1,000 | 3,000 | 0 | 0 | 11,500 |
| 3 வரவுசெலவு சுற்றறிக்கை 155 ஆம் இலக்கத்தின் பிரகாரம் ஏற்பாடு மிகை | 737 | 752 | 648 | 1,098 | 275 | 14,058 | 12,622 | 28,890 | 59,080 |
| 4. தேறிய ஒதுக்கீடு | 54,024 | 17,153 | 51,631 | 11,102 | 33,425 | 536,692 | 802,370 | 476,810 | 1,983,207 |
| 5. செலவு | 53,835 | 13,044 | 48,219 | 4,904 | 30,621 | 377,947 | 773,979 | 328,313 | 1,630,862 |
| 6. செலவின் விகிதாசாரம் | 100% | 76% | 93% | 44% | 92% | 69% | 96% | 69% | 82% |

**இச்செலவுகளுக்கான நிதியீட்டம் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது**

ரூ '000

| கணக்கீட்டச் செலவு | செலவு |
|---|---|
| *11 - தேசிய நிதி* | 1,258,957 |
| *12 - வெளிநாட்டுக் கடன்* | 346,865 |
| *17 - வெளிநாட்டு நிதிக்கடனில் உள்நாட்டு நிதி* | 25,040 |
| **மொத்தம்** | **1,630,862** |

**2. வருமானம் - பிராந்திய தோட்டக் கம்பனிகளில் கிடைக்கும் தவணைக் குத்தகைவாடகை**

2012 ஆண்டில் கிடைக்கத்தக்க வருவாய்

ரூ '000

| வருமான தலைப்பு | வருடாந்த வருமான மதிப்பீடு | மீள்திருத்தவருவாய் மதிப்பீடு | கிடைத்த வருவாய் | வருவாய் கிடைத்தலின் விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| 20.02.01.04 | 762,108 | 927,825 | 771,317 | 83% |

2012.12.31 **ஆம் திகதியில் நிலுவை வருவாய்**

ரூ '000

| வருமான தலைப்பு | 2012.12.31 ஆம் திகதியில் நிலுவை வருமானம் | 2012 ஆண்டில் அறவீடுகள் | நிலுவை வருவாயை அறவிடுதலுக்கான விகிதாசாரம் |
|---|---|---|---|
| 20.02.01.04 | 376,017 | 289,128 | 77% |

**அரசாங்க அலுவலர்களின் முற்பணங்கள் “பீ” கணக்கு**

ரூ '000

| | செலவின் ஆகக்கூடிய எல்லை | வரவுகளின் ஆகக் குறைந்த எல்லை | ஆகக்கூடிய பற்று மீதியின் எல்லை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லை | 6,000 | 3,000 | 31,000 |
| வருடத்தில் மீள்திருத்த எல்லை | 4,498 | 3,066 | 16,603 |